www.Padasalai.Net www.CBSEtips.in



# +2
# தமிழ்

## தேர்ச்சிக் கையேடு

**தமிழ் வணக்கம்**,

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கும் வினா - விடைகளைக் கண்டு அஞ்சி ஒதுங்கும் மாணவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் இந்தக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. வினாக்களுக்கான விடைகள் முடிந்தவரை எளிமையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருவியாகக் கொண்டும் ஆசிரியரின் ஆலோசனையைப் பெற்றும் படிக்கும் மாணவர்கள் சிறந்த மதிப்பெண்களைப் பெற முடியும்.

இது, மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் ஒரு கருவி மட்டுமே. மாணவர்கள் இக்கையேட்டைத் துணையாகக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளைச் சொந்தமாகத் தொடர் அமைத்து எழுதும் திறனைப் பெறுவார்களாக.

இக்கையேட்டை உருவாக்குவதற்கு ஊக்கமளித்த ஆசிரிய நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மெய்ப்புத் திருத்தம் பார்த்து உதவிய நண்பர்கள் **திரு. கலைச்செல்வன் (அரசு மேல்நிலைப்பள்ளி - கீழக்காவட்டாங்குறிச்சி)**, **திரு. ஜெயவேல் (அரசு மேல்நிலைப்பள்ளி - மால்வாய்)** ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆசிரியப் பெருமக்களுக்கு ஒரு வேண்டுகோள்

கையேட்டில் ஏதேனும் பிழை இருப்பின் அருள்கூர்ந்து 99 422 522 95 என்ற Whats App எண்ணிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.




**சுரேஷ் குயோரா**,
**முதுகலைத் தமிழாசிரியர்**,
**அரசு மேல்நிலைப்பள்ளி**,
**ஏலாக்குறிச்சி**,
**அரியலூர் மாவட்டம்**.




**திரு. கலைச்செல்வன்**



**திரு. ஜெயவேல்**



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## ஒரு மதிப்பெண் வினாக்கள்

### 1. செய்யுள், உரைநடை வினாக்கள்

1.இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேர பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. "மீண்டும் அந்த பழமை நலம் புதுக்குதற்கு" - கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
க. பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
உ. பொதிகையில் தோன்றியது
ங. வள்ளல்களைத் தந்தது
அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) உ, ங இரண்டும் சரி

3. "மின்னேர் தனி ஆழி வெங்கதிர் ஒன்று ஏனையது
தன்னேரிலாத தமிழ்" - இவ்வடிகளில் பயின்றுவந்துள்ள தொடைநயம்
அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை

4. கருத்து 1 : இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

5. பொருத்துக.
அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப் பூ - 2) தி.சு. நடராஜன்
இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்
அ) 4 3 2 1 ஆ) 1 4 2 3 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1

6. பொருத்துக.
அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து விழுந்தன
இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன
அ) 1 3 4 2 ஆ) 3 1 2 4 இ) 3 2 1 4 ஈ) 2 1 3 4

7. "நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது" - என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

8. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

9. '**பொய்யா வானம்** புதுப்பெயல் பொழிந்தென' - தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

10. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே, புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
இ) கால நிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

11. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை.....
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

12. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
அ) உரிமைத் தாகம் - 1) பாரசீக கவிஞர்
ஆ) அஞ்ஞாடி - 2) பூமணி
இ) ஜலாலுத்தீன் ரூமி - 3) பக்தவச்சல பாரதி
ஈ) தமிழர் குடும்ப முறை - 4) சாகித்திய அகாதெமி



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) 2 4 3 1 ஆ) 3 4 1 2 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1

13. "இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக" என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

14. "உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்" - யார்? யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

15. " எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது
அ) தனிக் குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை
இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தை வழிச் சமூக முறை

16. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்
இ) சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்
ஈ) மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

17. கடலின் பெரியது
அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) திணை அளவு செய்த உதவி ஈ) அவசரத்தில் செய்த உதவி

18. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.
நல்லார் நயவர் இருப்ப நயமிலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்.
அ) இருவேறு உலகத்து இயற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு.
ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு.
இ) ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான்முந் துறும்.
ஈ) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

19. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.
உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகளை விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்
விரைகிறது மனம்
பரபரப்பும் மனவழுத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலை கட்டிக் கொள்கிறது குழந்தை
'போ அந்தப் பக்கம்'
உதறிச் செல்கிறேன் குழந்தையை.
அ) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.
ஆ) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு.
இ) அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்.
ஈ) நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற?

20. வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



21. பொருத்துக.

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக் கொல்லி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2) ஞாலத்தின் மாணப் பெரிது
இ) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப் படும்
ஈ) காலத்தினால் செய்த நன்றி - 4) நன்மை கடலின் பெரிது

அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 இ) 1 2 3 4 ஈ) 2 3 4 1

22. பின்வருவனவற்றுள் எண்ணும்மை எது?
அ) அன்பும் அறமும் ஆ) நன்கலம் இ) மறத்தல் ஈ) உலகு

23. தெப்பம், பாதுகாப்பு - என்று பொருள் தரும் சொற்கள்
அ) வெகுளி, புணை ஆ) ஏமம், திரு இ) புணை, ஏமம் ஈ) வெகுளி, திரு

24. பகையும் உளவோ பிற? - இதில் பகை என்பது
அ) புணை ஆ) சினம் இ) ஏமம் ஈ) திரு

25. செல்லிடத்து - இச்சொல்லுக்கான புணர்ச்சி விதிகள்
அ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்; உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்; உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
இ) தன்னொற்றிரட்டல்; உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
ஈ) பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும்; உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

26. "காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலம்' உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

27. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

28. "விண் வேறு; விண்வெளியில் இயங்குகின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" - இத்தொடர் தரும் முழுமையான பொருள்
அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு

29. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளி இலைச்சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

30. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

31. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல; அது நம்பிக்கை மையம். - காரணம்
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

32. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம். துணி சார்ந்ததாகவே இருந்தது.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி

33. பொருத்துக.

அ) திருவல்லிக்கேணி ஆறு - 1) மாவலிபுரச் செலவு
ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2) கல் கோடரி
இ) பல்லாவரம் - 3) அருங்காட்சியகம்
ஈ) எழும்பூர் - 4) கூவம்

அ) 1 2 4 3 ஆ) 4 2 1 3 இ) 4 1 2 3 ஈ) 2 4 3 1

34. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

35. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




36. ஆர்ப்பரிக்கும் கடல்
அதன் அடித்தளம் மௌனம்;
மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது
அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்
இ) நிறைகுடம் நீர்த்தளும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

37. ஏழாண்டு இயற்றிஓர் ஈராறு ஆண்டில் சூழ்கடல் மன்னற்குக் காட்டல்.... - தொடரில் வெளிப்படும் செய்திகள்
1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.
அ) 1 சரி, 2 தவறு ஆ) 1 தவறு, 2 சரி இ) 1 தவறு, 2 தவறு ஈ) 1 சரி, 2 சரி

38. பொருத்துக.
அ) ஆமந்திரிகை -1) பட்டத்து யானை
ஆ) அரசு உவா - 2) மூங்கில்
இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்
ஈ) கழை - 4) எடை அளவு
அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1

39. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) அண்மைக் காட்சி துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

40. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.
ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.
இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.
ஈ) எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

41. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.
"மனமோ மாட்டு வண்டி
பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில் சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு; அதுவே தெளிவு".
அ) எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு அவ்வ துறைவ தறிவு.
ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ நன்றின்பால் உய்ப்ப தறிவு.
இ) அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்க லாகா அரண்.
ஈ) எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

42. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.
"சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம் - மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு".
அ) பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும் கெழுதகைமை கேடு தரும்.
ஆ) எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை அதிர வருவதோர் நோய்.
இ) நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின் அல்லற் படுப்பதூஉம் இல்.
ஈ) பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் கழகத்துக் காலை புகின்.

43. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?
அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

44. 'திண்ணியர்' என்பதன் பொருள்
அ) அறிவுடையவர் ஆ) மன உறுதி உடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

45. ஆராய்ந்து சொல்கிறவர்
அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்

46. பொருத்துக.
அ) பாம்போடு உடனுறைந் தற்று - 1) தீக்காய்வார்
ஆ) செத்தார் - 2) சீரழிக்கும் சூது
இ) வறுமை தருவது - 3) கள் உண்பவர்
ஈ) இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார் - 4) உடம்பாடு இலாதவர்
அ) 1 2 3 4 ஆ) 2 3 4 1 இ) 4 1 3 2 ஈ) 4 3 2 1

47. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்
அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர் ஆ) மனத்திட்பம் உடையவர்
இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர் ஈ) சூதாடும் இடத்தில் காலம் கழிப்பவர்

48. எளியது, அரியது என்பன
அ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை
ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது
இ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு
ஈ) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

49. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

50. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

51. முச்சந்தி இலக்கியம் என்பது
**கூற்று** 1 : கதை வடிவிலான வடிவமுடையது.
**கூற்று** 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது.
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

52. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்
அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

53. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்
அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

54. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

55. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.
அ) தனித்தமிழ்த் தந்தை - மு. வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - மயிலை சீனி. வேங்கடசாமி
இ) தமிழ்த் தென்றல் - திரு. வி. க.
ஈ) மொழி ஞாயிறு - தேவநேயப் பாவாணர்

56. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

57. 'நான் வெற்று வெளியில் அலைந்துகொண்டிருக்கிறேன் எனது முகத்தை தேடியபடி' என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது
அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை
இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

58. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## விடைகள்

1. இ) தொல்காப்பியம்
2. ஆ) க, உ இரண்டும் சரி
3. இ) அடி எதுகை, சீர் மோனை
4. இ) இரண்டு கருத்தும் சரி
5. ஈ) 2 3 4 1
6. ஆ) 3 1 2 4
7. இ மழைத்துளிகள்
8. ஆ) மணல் அள்ளுதல்
9. ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
10. அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
11. ஆ) திருமணமும் குடும்பமும்
12. இ) 2 4 1 3
13. ஈ) இவை அனைத்தும்
14. இ) இராமன், சுக்ரீவன்
15. ஈ) தந்தை வழிச் சமூக முறை
16. இ) சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்
17. ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
18. அ) இருவேறு உலகத்து இயற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு.
19. ஈ) நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற?
20. அ) செய்யாமல் செய்த உதவி
21. ஆ) 3 4 1 2
22. அ) அன்பும் அறமும்
23. இ) புணை, ஏமம்
24. ஆ) சினம்
25. அ) தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்;
    உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
26. இ) இசைக்கருவி
27. ஆ) காவியம்
28. ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு
29. இ) கடுக்காய்
30. ஆ) கணிதம்
31. ஈ) அ, ஆ, இ - அனைத்தும்
32. ஈ) கூற்று சரி, காரணம் சரி
33. இ) 4 1 2 3
34. இ) முரண் பண்பு
35. இ) நாய்
36. ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது
37. ஈ) 1 சரி, 2 சரி
38. அ) 3 1 4 2
39. ஈ) காட்சி மறைவு
40. ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து.
41. அ) எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு அவ்வ துறைவ தறிவு.
42. இ) நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின் அல்லற் படுப்பதூஉம் இல்
43. ஈ) தீயினத்தார்
44. ஆ) மன உறுதி உடையவர்
45. இ) தூதுவர்
46. ஈ) 4 3 2 1
47. அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்
48. ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது
49. ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
50. ஈ) அனைத்தையும்
51. ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
52. இ) வளர்ந்த
53. ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
54. இ) திண்டிவனம்
55. அ) தனித்தமிழ்த் தந்தை - மு. வரதராசனார்
56. ஈ) கிறித்தவமும் தமிழும்
57. இ) தமது அடையாளத்தை
58. ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

## 2. இலக்கணம், மொழிப்பயிற்சி, துணைப்பாட வினாக்கள்

1. பிழையான தொடரைக் கண்டறிக.
   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
   ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
   இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
   ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின.

2. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

3. தமிழில் திணைப் பாகுபாடு _____________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

4. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
   அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்
   அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

6. பொருத்தி விடை தேர்க.
அ) அவன், அவள், அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை
ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப்பன்மை
இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்
ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்
அ) 4 1 2 3 ஆ) 2 3 4 1 இ) 3 4 1 2 ஈ) 4 3 1 2

7. அடைமழை பெய்த அடுத்த நாள் படை படையாய் வந்ததாம் பரங்கி நாட்டு விமானம்;
எதிரி சுடாமலேயே இறகொடிந்து இறந்ததாம் - அது என்ன?
அ) ஈசல் ஆ) பூசல் இ) ஊசல் ஈ) டீசல்

8. தண்ணீரும் மழையும் இல்லாமல் பயிர் பச்சையாய் இருக்கிறது;
பாக்கு வெற்றிலை போடாமல் வாய் சிவப்பாய் இருக்கிறது - அது என்ன?
அ) கிளி ஆ) மயில் இ) குயில் ஈ)நாரை

9. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.
அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளிவிட்டு எழுதுதல்
இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
ஈ) வல்லின மெய்களை தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

10. வல்லினம் மிகும், மிகா தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.
அ) பாலை பாடினான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்
ஆ) பாலைப் பாடினான் - 2) தேரினைப் பார்த்தான்
இ) தேரை பார்த்தான் - 3) பாலினைப் பாடினான்
ஈ) தேரைப் பார்த்தான் - 4) பாலைத்திணை பாடினான்
அ) 4 1 3 2 ஆ) 2 3 1 4 இ) 4 3 1 2 ஈ) 2 4 1 3

11. பொருத்துக.
அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்
ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்
இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்
ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா
அ) 1 2 4 3 ஆ) 4 3 1 2 இ) 2 3 1 4 ஈ) 3 4 2 1

12. படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

13. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் பயின்று வந்துள்ளது
அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

14. **கூற்று** : உவமை உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.
**காரணம்** : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

15. மெய்ப் படிமத்துக்கு உரிய பாடலைத் தேர்வு செய்க.
அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந்தாங்கு.....
ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது.....
இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்......
ஈ) வெந்தாறு பொன்னின் அந்திப் பூப்ப......

16. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" - இதில் அமைந்துள்ள படிமம்
அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

17. 'ஐம்பெரும் காப்பியம்' என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

18. **கூற்று** 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.
**கூற்று** 2 : ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று நீலகேசி.
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 2 சரி, கூற்று 1 தவறு
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

19. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.
அ) காதை - கந்தபுராணம்
ஆ) சருக்கம் - சீவகசிந்தாமணி
இ) இலம்பகம் - சூளாமணி
ஈ) படலம் - சிலப்பதிகாரம்
அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 இ) 3 4 2 1 ஈ) 4 3 1 2

20. தவறான இணையைத் தேர்க.

| பாவகை | இலக்கியம் |
|---|---|
| அ) விருத்தப்பா | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | அகநானூறு |
| இ) கலிவெண்பா | தூது |
| ஈ) குறள் வெண்பா | திருக்குறள் |

21. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.
அ) கர்ணன் தோற்றான் போ. ஆ) வயதில் சிறியவள்; ஆனாலும் தலைவி!
இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு. ஈ) இந்தா போறான் தருமன்.

22. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒற்றைத் தேர்க.
அ) உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்
ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது
இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்
ஈ) விளங்காத கருத்துக்களைப் பழமொழியின் மூலம் விளக்குவது

23. 'சாப விமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ். ராமகிருஷ்ணன்

24. பண்புக் குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.
அ) அறம் - 1) கர்ணன்
ஆ) வலிமை - 2) மனுநீதிச் சோழன்
இ) நீதி - 3) பீமன்
ஈ) வள்ளல் - 4) தருமன்
அ) 3 2 1 4 ஆ) 4 3 2 1 இ) 2 4 3 1 ஈ) 4 3 1 2

25. குறியீடுகளைப் பொருத்துக.
அ) பெண் - 1) சமாதானம்
ஆ) புறா - 2) வீரம்
இ) தராசு - 3) விளக்கு
ஈ) சிங்கம் - 4) நீதி
அ) 2 4 1 3 ஆ) 2 4 3 1 இ) 3 1 4 2 ஈ) 3 1 2 4

26. **கூற்று** : 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.
**காரணம்** : பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்றும் சரி, காரணமும் சரி
இ) கூற்றும் தவறு, காரணமும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

27. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களில் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்
அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமம்

28. 'திட்டம்' என்னும் தலைப்பில், 'வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?' என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?
அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

29. மறைத்துச்சொல்லவும் மிகுத்துச்சொல்லவும் அழுத்திச்சொல்லவும் பயன்படும் இலக்கியஉத்தி
அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

**விடைகள்**

1. இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
2. அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
3. அ) பொருட்குறிப்பு
4. இ) தொல்காப்பியம்
5. ஆ) உயர்திணை, அஃறிணை
6. அ) 4 1 2 3
7. அ) ஈசல்
8. அ) கிளி
9. இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
10. இ) 4 3 1 2
11. ஆ) 4 3 1 2
12. இ) காட்சி
13. ஆ) வினைப்படிமம்
14. அ) கூற்று சரி, காரணம் தவறு
15. இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்......
16. ஈ) உருப்படிமம்
17. ஆ) மயிலைநாதர்
18. அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
19. அ) 4 3 2 1
20. அ) விருத்தப்பா - நாலடியார்
21. ஆ) வயதில் சிறியவள்; ஆனாலும் தலைவி!
22. ஈ) விளங்காத கருத்துக்களைப் பழமொழியின் மூலம் விளக்குவது
23. ஆ) புதுமைப்பித்தன்
24. ஆ) 4 3 2 1
25. இ) 3 1 4 2
26. ஆ) கூற்றும் சரி, காரணமும் சரி
27. ஈ) உள்ளுறை உவமம்
28. இ) திட்டம்
29. அ) குறியீடு

2.1. **கலைச்சொல் அறிக.**

| | |
|---|---|
| 1. Sabscription - உறுப்பினர் கட்டணம்<br>Fiction -புனைவு<br>Biography -வாழ்க்கை வரலாறு<br>Archive -ஆவணம்<br>Manuscript -கையெழுத்துப் பிரதி<br>Bibliography -நூல் நிரல் | 2. Platform - நடைமேடை<br>Train track - இருப்புப் பாதை<br>Railway signal - தொடர்வண்டி வழிக்குறி<br>Ticket inspector - பயணச்சீட்டு ஆய்வாளர்<br>Level crossing - இருப்புப் பாதையைக் கடக்கும் இடம்<br>Metro train - மாநகரத் தொடர்வண்டி |
| 3. Lobby - ஓய்வறை<br>Checkout - வெளியேறுதல்<br>Tips - சிற்றீகை<br>Mini meals - சிற்றுணவு | 4. Arrival - வருகை<br>Departure - புறப்பாடு<br>Conveyor belt - ஊர்திப் பட்டை<br>Take off - வானூர்தி கிளம்புதல்<br>Passport - கடவுச்சீட்டு<br>Visa - நுழைவு இசைவு<br>Domestic flight - உள்நாட்டு வானூர்தி |
| 5. Affidavit - ஆணை உறுதி ஆவணம்<br>Allegation - சாட்டுரை<br>Conviction - தண்டனை<br>Jurisdiction - அதிகார எல்லை<br>Plaintiff - வாதி | 6. Artist - கவின் கலைஞர்<br>Animation - இயங்குபடம்<br>Newsreel - செய்திப்படம்<br>Cinematography - ஒளிப்பதிவு<br>Sound effect - ஒலிவிளைவு<br>Multiplex complex - ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம் |
| 7. Debit card - பற்று அட்டை<br>Demand draft - கேட்பு வரைவோலை<br>Withdrawal slip - திரும்பப் பெறும் படிவம்<br>Teller - விரைவுக் காசாளர்<br>Mobile banking - அலைபேசி வழி வங்கி முறை<br>Internet banking - இணைய வங்கி முறை | 8. Stamp pad - மைப் பொதி<br>Stapler - கம்பித் தைப்புக் கருவி<br>Folder - மடிப்பு த்தாள்<br>File - கோப்பு<br>Rubber stamp - இழுவை முத்திரை<br>Eraser - அழிப்பான் |

2.2. **இலக்கணக் குறிப்பு அறிக.**

★ **பண்புத்தொகை** - அருந்திறல், கருந்தடம், கொடுங்கோல், செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம், தொல்நெறி, நன்கலம், நன்மொழி, நன்னாடு, நெடுவழி, நெடுவேல், பெருங்கடல், புதுப்பெயல், வெங்கதிர், வெங்குருதி, வெள்ளருவி, வெண்குடை, சிறுகுடி

★ **வினைத்தொகை** - காய்நெல், தாழ்கடல், வயங்குமொழி, வளர்தலம், விரிகடல்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- ★ **தொழிற்பெயர்** - நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சொல்லுதல், மலைதல், மறத்தல், அல்லல், மறத்தல்
- ★ **வினையாலணையும் பெயர்** - உயர்ந்தோர், செற்றவர், பாதகர், வாழ்பவன்
- ★ **அடுக்குத்தொடர்** - ஊன்ற ஊன்ற, முத்துமுத்தாய், வேறு வேறு, யார் யார்வாய், கொஞ்சம் கொஞ்சமாக
- ★ **உரிச்சொல் தொடர்** - தடக்கை, மாதவம், மாமயிலை
  **எண்ணும்மை** - அறிவும் புகழும், அன்பும் அறமும், ஆடலும் பாடலும், பண்பும் பயனும், வையகமும் வானகமும், நகையும் உவகையும், தேமாவும் புளிமாவும்
- ★ **இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை** - அரவக்கடல்
- ★ **பெயரெச்சம்** - ஈந்த, கொடுத்த, சொற்ற, திருந்திய, புக்க, வாய்த்த, கண்ட, கொல்லும் சினம், சலிக்கும் காற்று
- ★ **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** - அடையா, அறியா, பொய்யா, உள்ளழிக்கலாகா, மறவா
- ★ **வினையெச்சம்** - சிவந்து, சினந்து, வெந்து, உவப்ப(மகிழ) (இயல் 8), போந்து (இயல் 8), தொடங்க
- ★ **உவமைத்தொகை** - கடல்தானை, மலரடி
- ★ **உருவகம்** - வியர்வை வெள்ளம்
- ★ **இசைநிறை அளபெடை** - உழாஅது, கவாஅன், சிறாஅர்
- ★ **இன்னிசை அளபெடை** - படுப்பதூஉம்
- ★ **சொல்லிசை அளபெடை** - ஒரீஇ, வளைஇ, வெரீஇய
- ★ **இடைக் குறை** - இலாத, உளது
- ★ **மரூஉ** - நுந்தை
- ★ **ஆகுபெயர்** - உலகு, நீலம்
- ★ **முன்னிலைப் பன்மை வினைமுற்று** - உன்னலிர்
- ★ **ஏவல் வினைமுற்று** - ஓர்மின், செலுத்து

## இலக்கணக்குறிப்புச் சூத்திரம்

### வெளிப்படை:

- ★ கடி, மா, வை, தட, சால, தவ, நனி = உரிச்சொல் தொடர்
- ★ அல், தல், ஐ, கை, இ = தொழிற்பெயர்
- ★ அர், ஆர், ஓர் = வினையாலணையும் பெயர்
- ★ க, இய = வியங்கோள் வினைமுற்று
- ★ ஆ = ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- ★ அ, (உம்) = பெயரெச்சம்
- ★ இ, உ, (அ) = வினையெச்சம்
- ★ உம் உம் = எண்ணும்மை
- ★ உம் = முற்றும்மை
- ★ என், ஏன் = தன்மை ஒருமை வினைமுற்று
- ★ அம், ஓம் = தன்மைப் பன்மை வினைமுற்று
- ★ ஆய், (இ) = முன்னிலை ஒருமை வினைமுற்று
- ★ இர், ஈர் = முன்னிலைப் பன்மை வினைமுற்று
- ★ மின் = ஏவல் பன்மை வினைமுற்று
- ★ அர், ஆர் = படர்க்கை வினைமுற்று

### மறைவு:

- ★ ~~மை~~ = பண்புத்தொகை
- ★ ~~முக்காலம்~~ = வினைத்தொகை
- ★ ~~போன்ற~~ = உவமைத்தொகை
- ★ ~~உம்~~ = உம்மைத்தொகை
- ★ ~~என்கிற~~ = உருவகம்

### அளபெடை(இரண்டு உயிர் தொடர்ந்து வரும்):

- ★ வாஅ, ழாஅ, றாஅ = செய்யுளிசை(இசைநிறை) அளபெடை
- ★ தூஉ = இன்னிசை அளபெடை
- ★ ரீஇ, ளைஇ = சொல்லிசை அளபெடை



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

### 1. செய்யுள் வினாக்கள்

**1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழில் துணை வேண்டும் என்கிறார்?**

- செங்கதிரவன் மலை உச்சியில் மாலைநேரத்தில் தலைசாய்க்கும்போது வானமெல்லாம் செந்நிறமான பூக்களாக மாறுவதுபோல், உழைக்கும் தொழிலாளர்களின் கைகள் சிவந்து காணப்படும்.
- உழைக்கும் தொழிலாளர்களின் தோள்மீது வியர்வைத்துளி முத்துமுத்தாய் வீற்றிருக்கும்.
- அவற்றையெல்லாம் வியந்து பாட தமிழின் துணை வேண்டும் எனக் கவிஞர் சிற்பி பாடியுள்ளார்.

**2. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம் ஆகிறது' - விளக்கம் தருக.**

- மழை பெய்து ஓய்ந்து மேகங்கள் கலைந்தன; சூரியக் கதிர்கள் பூமியில் பரவத் தொடங்கின.
- மழை மேகங்களால் இருண்டு கிடந்த நகரம், சூரிய ஒளியால் பட்டை தீட்டப்பட்ட வெள்ளை வைரம்போல பளிச்சென்று காட்சியளித்தது.

**3. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?**

- "அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது;
- என் பொய்யான உலகப்பற்று அழிந்தது;
- என் பிறவி ஒழிந்தது" என்று நிலையாமை குறித்து சவரி கூறுகிறார்.

**4. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

- எதிர்பாராத நிகழ்வுகளான ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு ஆகியவற்றை 'எதிர்பாராத விருந்தாளிகள்' என ஜலாலுத்தீன் ரூமி உருவகப்படுத்துகிறார்.

**5. 'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது'**
**என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?**
**அ) நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ) சிறு துரும்பும் பல் குத்த உதவும்**

- "துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது" என்ற இராமனின் கூற்று, 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்ற பழமொழியுடன் ஒத்துப் போகிறது.

**6. பொருள் கூறுக. அ) வெகுளி, ஆ) புணை, இ) ஏமம், ஈ) திரு**

- வெகுளி - சினம்
- புணை - தெப்பம்
- ஏமம் - பாதுகாப்பு
- திரு - செல்வம்

**7. "பகையும் உளவோ பிற" - பொருள் கூறுக.**

- ஒருவனுக்கு, சினத்தைக் காட்டிலும் மோசமான பகை வேறு உளவோ? இல்லை.
- ஏனெனில், ஒருவனது முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் சினம் அழித்துவிடும்.

**8. 'முயல்வாருள் எல்லாம் தலை' என்று வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**

- அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை நடத்துபவரை, 'முயல்வாருள் எல்லாம் தலை' என வள்ளுவர் சுட்டுகிறார்.

**9. ஞாலத்தின் பெரியது எது?**

- உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது செய்யப்பட்ட காலத்தை நோக்கும்போது ஞாலத்தின் (உலகத்தின்) அளவைவிட மிகப்பெரியதாகும்.

**10. மறக்கக் கூடாதது, மறக்கக்கூடியது எவற்றை?**

- **மறக்கக் கூடாதது**: பிறர் செய்த நன்மையை என்றென்றும் மறக்கக் கூடாது.
- **மறக்கக் கூடியது**: பிறர் செய்த தீமையை அன்றே, அப்பொழுதே மறந்துவிடவேண்டும்.

**11. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?**

- ஒருவர் சேர்த்து வைத்த செல்வம் குறையாமல் இருப்பதற்கு, பிறர் பொருளின் மீது விருப்பம் கொள்ளாதிருத்தலே சிறந்த வழியாகும்.

**12. சினத்தை ஏன் காக்க வேண்டும்?**

- ஒருவன், தன்னைக் காத்துக்கொள்ள விரும்பினால் சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும்.
- ஏனெனில், சினம் அதைக் கொண்டவரையே அழித்துவிடும்.

**13. இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?**

'இடையீடு' எனும் கவிதை,

- கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம்,
- அதனை வெளிப்படுத்தும் வண்ணம்,



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- உள்வாங்கும் வாசகனின் மனநிலை

போன்றவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது.

14. **வசனம், கவிதை வேறுபாடு தருக.**

**வசனம்** : சொற்களைச் சேர்த்து எழுதும்போது எதுகை, மோனை, அடியளவு போன்றவற்றைப் பார்க்காமல் எழுதும் வடிவம் வசனம்.

**கவிதை** : யாப்பிலக்கணக் கோட்பாடுகளுக்குள் வந்து அடங்குமாறு சொற்களைச் சேர்ப்பது கவிதை.

15. **"எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" - யார்க்கு?**
- கல்வியிலும் கலையிலும் சிறந்து விளங்குவோர்க்கு, எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்.

16. **கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.**

**கலிவிழா** : **எழுச்சிமிக்க விழா**

எழுச்சிமிக்க விழாக்கள் நிறைந்த வீதிகளை உடைய ஊர் திருமயிலை.

**ஒலிவிழா** : **ஆரவார விழா**

மயிலை கபாலீச்சரம் கோவிலில், பங்குனி உத்திரம் ஆரவாரமாகக் கொண்டாடப்படும்.

17. **'தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே' - தொடருக்குப் பதவுரை எழுதுக.**
- **தருமமிகு சென்னையில்** : அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையில் (உள்ள)
- **கந்தகோட் டத்துள்வளர் தலம்** : வளர்தலமாகிய கந்த கோட்டத்துக் கோவிலில்
- **ஓங்கு கந்தவேளே!** : எழுந்தருளியிருக்கும் கந்தவேளே!

18. **'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' - தொடரிலுள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.**
- **சிறுகுடிப் பரதவர்** : சிறு குடிகளாக வாழ்பவர் பரதவர்.
- **பெருங்கடல் வேட்டம்** : பெரிய கடல் பரப்பில், அவர்கள் மீன் வேட்டையாடுவர்.
- **முரண் நயம்** : சிறுகுடி × பெருங்கடல்

19. . **எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

1. நகை 2. அழுகை 3. இளிவரல் 4. மருட்கை
5. அச்சம் 6. பெருமிதம் 7. வெகுளி 8. உவகை

20. **ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.**
- **எழினி** : அரங்க மேடைகளில் பயன்படுத்தப்படும் திரைச்சீலை.
- **ஒருமுக எழினி** : மேடையின் ஒரு புறத்தில் தொடங்கி, மறுபுறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்படும் திரைச்சீலை.
- **பொருமுக எழினி** : மேடையின் இரு புறத்திலிருந்தும் தொடங்கி, நடுவில் பொருந்துமாறு அமைக்கப்படும் திரைச்சீலை.

21. **'மூச்சு நின்றுவிட்டால் பேச்சும் அடங்கும்' - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.**
- எரிவதை நிறுத்தினால் கொதிப்பது அடங்கும்.
- ஆட்டமும் பாட்டமும் ஆவி உள்ளவரை மட்டுமே.

22. **மனதை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவர் கூறுவது ஏன்?**
- மனதை அதன்போக்கில் செல்ல விடக்கூடாது.
- ஏனெனில், அவ்வாறு செல்லவிட்டால் தீமை ஏற்படும்.
- எனவே, மனதைத் தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்த வேண்டும்.

23. **உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து - இக்குறட்பாவின் உவமையைப் பொருளுடன் பொருத்துக.**
- **உவமை** : பெரிய தேரை இயக்குவதற்கு சிறிய அச்சாணி அவசியம்.
- **பொருள்** : எனவே, ஒருவரின் உருவத்தைக் கண்டு இகழக் கூடாது.
- **பொருத்தம்** : உருவில் சிறியவரும் வல்லமை பெற்றிருப்பர்.

24. **மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?**
- ஒருவர், தாம் எண்ணியதை எண்ணியவாறு அடைய விரும்பினால், எண்ணிய செயலில் மன உறுதியோடு இருத்தல் வேண்டும்.

25. **'நஞ்சுண்பவர்' என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?**
- கள்ளுண்பவரை, 'நஞ்சுண்பவர்' என வள்ளுவர் இடித்துரைக்கிறார்.
- "உறங்கியவர், இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர். அவ்வாறே கள்ளுண்பவரும் நஞ்சுண்பவரே" என்று வள்ளுவர் கூறுகிறார்.

26. **அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத் தகாதன யாவை?**
- அரசரோடு நட்பு பாராட்டினாலும், அரசர்க்குத் தகுதி அல்லாதனவற்றைச் செய்தல் கூடாது.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- "அரசர் பழைய நண்பர் எனக்கருதி, பண்பல்லாத செயல்களைச் செய்யக்கூடாது" என வள்ளுவர் கூறுகிறார்.

**27. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?**
- பகைவராலும் அழிக்க முடியாத அரண் அறிவு.
- அழிவு நேராமல் நம்மைப் பாதுகாக்கும் கருவியும் அறிவேயாகும்.

**28. அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?**
- வாள்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவர்க்கு அஞ்ச வேண்டியதில்லை.
- ஆனால், உட்பகை கொண்டு உறவினர் போல நடிப்பவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்

**29. வறுமையும் சிறுமையும் தருவது எது?**
- சூது, ஒருவருக்குத் துன்பம் பலவற்றையும் உண்டாக்கி அவருடைய புகழையும் கெடுத்துவிடும்.
- எனவே, வறுமையும் சிறுமையும் தருவது சூது.

**30. நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.**
- நான் படித்ததில் பிடித்த குறள்
- உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
  அச்சாணி அன்னார் உடைத்து.
- "உருவில் சிறியவரும் உயரிய செயல்களுக்குக் காரணமாக விளங்குவர். எனவே, உருவுகண்டு எள்ளாமை வேண்டும்" என வலியுறுத்துவதால் இக்குறள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

**31. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**
- உலகில் சிறந்த துணை : நல்லினத்தாரின் நட்பு.
- துன்பத்தைத் தரும் பகை : தீயினத்தாரின் பழக்கம்.

**32. இலக்கணக்குறிப்புத் தருக. அ) ஒரீஇ ஆ) படுப்பதூஉம் இ) சொல்லுதல்**
- அ) ஒரீஇ - சொல்லிசை அளபெடை
- படுப்பதூஉம் - இன்னிசை அளபெடை
- சொல்லுதல் - தொழிற்பெயர்

**33. கீழ்நீர் குளித்தானைத் தீத்துரீஇ யற்று - பொருள் கூறுக.**

**பொருள்** : நீரில் மூழ்கிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது.

**விளக்கம்** : கள்ளை உண்டு மயங்கியவனிடம் நல்லன சொல்லித் திருத்த முயல்வது என்பது நீரில் மூழ்கி ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றதாகும்.

**34. எந்த ஒரு பொருளைப் பயன்படுத்தும் போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேனீரைப் பருகும்போது அதற்குப் பின்னாலுள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.**
- ஒரு தேநீருக்குப் பின்னால்.....
- தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் உழைப்பும்,
- சர்க்கரைக்காகக் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளின் உழைப்பும்,
- பாலுக்காகப் பசு வளர்ப்போரின் உழைப்பும் இருக்கின்றன.
- இவ்வாறு, பலரின் உழைப்பையே நாம் தேநீராகப் பருகுகின்றோம்.

**35. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?**
- 'அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறையறிந்து வரி திரட்ட வேண்டும்.
- அவ்வாறு முறையாக வரி திரட்டினால், கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்று நாடு செழிப்படையும்' என்று பிசிராந்தையார் கூறுகிறார்.

**36. செவியறிவுறூஉ துறையை விளக்குக.**
- அரசன் செய்யவேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அறிவுறுத்துவதே 'செவியறிவுறூஉ' என்னும் துறையாகும்.
- "அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
  கோடி யாத்து நாடு பெரிது நந்தும்" - புறநானூறு.

**37. முகம் முகவரியற்றுப் போனதற்கு, சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.**
- "எனக்குள்ளே என்னை நான் தொலைத்துவிட்டேன்.
- அதனால், எனது முகம் முகவரியற்றுப் போனது" என்று சுகந்தி சுப்பிரமணியன் கூறுகிறார்.

**38. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?**
- "இத்தனை இன்னல்களை இறைமகனார் அடைந்த பிறகும்,
- இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே!
- வானம் இடிந்து விழவில்லையே!
- கடல்நீர் வற்றவில்லையே!" என்றெல்லாம் மக்கள் புலம்பினர்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

## 2. உரைநடை வினாக்கள்

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**
- கவிதையின் இயங்காற்றல்தான் நடை என்று தொல்காப்பியம் கூறுகிறது.
- 'நடைபெற்றியலும்', 'நடைநவின்றொழுகும்', 'ஆசிரிய நடைத்தே வஞ்சி; வெண்பா நடைத்தே கலி' என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**2. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.**
- தலைவனும் தலைவியும் தற்காலிகமாகத் தங்குமிடம் புக்கில்.
- திருமணத்திற்குப்பின், கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் தன்மனை.

**3. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?**
- நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள் போன்றவை அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவின.

**4. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.**
- காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869 இல் உருவாக்கப்பட்டது கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்.
- இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

**5. பின்னணி இசை படத்தின் காட்சி அமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.**
- பின்னணி இசை திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக்கொணர உதவும்.
- எடுத்துக்காட்டாக, கதையின் நாயகி வீட்டின் சன்னல் வழியாகத் தலையை நீட்டி வெளியே தெரியும் ஒரு காட்சியை வெறித்துப் பார்க்கிறாள் எனில் தெரு காட்டப்படுவதில்லை.
- அவள் தெருவைப் பார்ப்பது மட்டுமே காட்டப்படுகிறது.
- அக்காட்சியில் ஒரு மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுகிறது.
- இதன்மூலம், அவளைப் பார்க்க வந்தவர் அவள் விருப்பத்திற்கு மாறாக அங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

**6. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**
- திட்டமிடுவதை ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டும்;
- அன்றைய பணிகளை மன அடுக்குகளில் வகுத்துக்கொள்ள வேண்டும்;
- எந்தச் செயலையும் அதற்குரிய காலத்தில் செய்தல் வேண்டும் - என்பன நேரமேலாண்மை பற்றிய சிந்தனைகளாகும்.
- இக்கருத்தையே 'பருவத்தே பயிர் செய்' என்னும் பழமொழி வலியுறுத்துகிறது.

**7. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.**
- கவின் கலைகள் குறித்து தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூல் 'தமிழர் வளர்த்த அழகு கலைகள்'.
- தமிழரின் கலைத்திறனை உலகத்திற்கு எடுத்தோதும் சிறந்த நூல் இது.
- இதனை எழுதியவர் மயிலை சீனி. வேங்கடசாமி.

**8. "விரிபெரு தமிழர் மேன்மை ஓங்கிடச் செய்வ தொன்றே உயிர்ப்பணி யாகக் கொண்டோன்" - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?**
- இது, பாரதிதாசன் மயிலை சீனி. வேங்கடசாமி பற்றி கூறியது.
- மயிலை சீனி. வேங்கடசாமி விரிந்து கிடக்கின்ற தமிழரின் மேன்மையை உலகறியச் செய்வது ஒன்றையே தனது உயிர்ப்பணியாகக் கொண்டவர்.
- அதனால்தான், பாரதிதாசன் அவ்வாறு புகழ்ந்து கூறினார்.

## 3. இலக்கணம், மொழிப்பயிற்சி வினாக்கள்

**1. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

**முடிந்தால் - இயன்றால்**
- ஏழைகளுக்கு, முடிந்தால் (பொருளுதவி) தரலாம்.

**முடித்தால் - முடித்துவிட்டால்**
- வேலையை முடித்தால் (ஊதியம்) தரலாம்.

**2. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**
- தமிழ் எழுத்துகளைத் தெளிவாக உச்சரித்துப் பழகவேண்டும்.
- வாய்விட்டுச் சொல்லிக்கொண்டோ அல்லது மனதுக்குள் உச்சரித்துக் கொண்டோ எழுத முயற்சிக்க வேண்டும்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- வேகமாக எழுதாமல், நிதானமாக எழுதிப் பழக வேண்டும்.
- ந, ண, ன / ல, ள, ழ / ர, ற என்பவற்றின் ஒலி வேறுபாடு அறிந்து எழுத வேண்டும்.
- குறில், நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

3. **"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக" - இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயம் மிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**
   - ஓசை நயம் மிக்க சொற்கள் : படாஅம், கெடாஅ, கடாஅ
   - இலக்கணக் குறிப்பு : இசைநிறை அளபெடைகள்
4. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**
   - விடியல் வானம், வண்ணங்களால் வனப்புடன் காட்சித் தருகிறது.
5. **உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

   **அ) தாமரை இலை நீர் போல**
   - நண்பரே ஆனாலும் அரசனிடம், 'தாமரை இலை நீர்போல'ப் பட்டும்படாமலும் பழக வேண்டும்.

   **ஆ) கிணற்றுத் தவளை போல**
   - 'நான் மட்டுமே அறிவாளி' என்று கூறுபவர், உலகம் அறியாத கிணற்றுத்தவளை போன்றவர்.

   **இ) எலியும் பூனையும் போல**
   - நானும் என் தங்கையும், எப்போதும் எலியும் பூனையும் போலச் சண்டையிட்டுக் கொள்வோம்.

   **ஈ) அச்சாணி இல்லாத தேர் போல**
   - தந்தையை இழந்த குடும்பம் அச்சாணி இல்லாத தேர்போல நிலைகுலைந்து போய்விடும்.

   **உ) உள்ளங்கை நெல்லிக்கனி போல**
   - கல்வியை ஆர்வத்தோடு கற்றால், தேர்ச்சி என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது.
6. **மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?**
   - திணை, பால், எண், இடம் ஆகியன மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுகின்றன.
7. **உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**
   - மாணவர்கள் தேர்வு எழுதினர்.
   - உறவினர்கள் திருமண விருந்தில் கலந்துகொண்டனர்.
8. **'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' - எனும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**
   - 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' எனும் முழக்கத்தொடர் வாயிலாக,
   - மழையைப் பெற மரம் வளர்க்க வேண்டும்;
   - பூமியின் பசுமையைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு மனிதரும் பங்கெடுக்க வேண்டும் என்பனவற்றை வலியுறுத்துவேன்.
9. **மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தி யதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான். - இரு தொடர்கள் ஆக்குக.**
   - மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்;
   - அதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.
10. **பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

    **அ) தலை, தளை, தழை** - சிரசு, கட்டு, இலை
    - முருகன், தழைகளைத் தளைத்துத் தலையில் தூக்கி வந்தான்.

    **ஆ) கலை, களை, கழை** - வித்தை, முகப்பொலிவு, மூங்கில்
    - கழைக்கூத்தாடி ஆடத் தொடங்கியதும், கலைநிகழ்ச்சி களைகட்டியது.

    **இ) அலை, அளை, அழை** - கடல்அலை, பிசை, கூப்பிடு
    - அலைகடல் ஓரம் கையை அளைந்துகொண்டு நடந்தவனை, அவன் நண்பன் அழைத்தான்.

    **ஈ) விலை, விளை, விழை** - பொருளின் விலை, விளைச்சல், விருப்பம்
    - முருகன், விளைந்த நெல்லை நல்ல விலைக்கு விற்க விழைந்தான்.
11. **வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடர் அமைக்க. மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.**
    - மாணவர்கள் வரிசையில்நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.
    - மாணவர்கள்வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.
12. **காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**
    - அவன், அண்ணன் வீட்டுக்குச் சென்றான்.
    - அவன் அண்ணன், வீட்டுக்குச் சென்றான்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

13. **சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி - இவற்றில் இரட்டைக்கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**

- இரட்டைக்கிளவித் தொடர்கள் : சல சல, கல கல.
- இரட்டைக்கிளவித் தொடரைப் பிரித்து எழுதக்கூடாது; சேர்த்தே எழுத வேண்டும்.
- எ. கா : சலசல, கலகல.

14. **திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?**

- 'திருவளர்செல்வன்' என்பதே சரியான தொடர்.
- ஏனெனில், வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

15. **கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

**அ) முன்** : அவன் முன்வந்து கூறினான்;
அவன்முன் வந்து கூறினான்.

**ஆ) தானே** : அவன்தானே சொன்னான்;
அவன் தானேசொன்னான்.

**இ) கொண்டு** : அவன் புதுசட்டை அணிந்து கொண்டாடினான்;
அவன் புதுசட்டை அணிந்துகொண்டு ஆடினான்.

**ஈ) விட்டான்** : முருகன் மீனைப் பிடித்துவிட்டான்;
முருகன் மீனைப்பிடித்து விட்டான்.

16. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

**அ) என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.**

- என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய× தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா**ப்** பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை**ப்** போல எதிர்கொண்டு× தீர்ப்பார்கள்.

**ஆ) எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.**

- எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி**ச்** செல்வதனை**க்** கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி**த்** துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

**இ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.**

- நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை**ப்** பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்த× கவனம் அறிவை**ப்** பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை**த்** தேவையாகும்.

**ஈ) மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ளவேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.**

- மாணவர்கள் பெற்றோர்களை**த்** தமது நண்பர்களாக**ப்** பாவித்து நட்பு× கொள்ளவேண்டும். தமது இன்ப துன்பங்களை**ப்** பெற்றோர்களுடன் பகிர்ந்து× கொள்ள வேண்டும்.

**உ) ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.**

- ஆசிரியருக்கு**க்** கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை**த்** தெரிந்து× கொண்டு அறியாமையினை அகற்றி**ப்** பல நல்லனவற்றை**க்** கற்று**க்** கொடுக்கும்.

17. **பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**

**அ) குமரன் வீடு பார்த்தேன்.**

- குமரனை வீட்டில் பார்த்தேன்.

**ஆ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்?**

- மாறனின் பேச்சுத்திறனை யாரால் வெல்ல முடியும்?

**இ) போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.**

- போட்டியில் வெற்றி பெற்றதால், கலைச்செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.

**ஈ) அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.**

- அனைவரையும் அன்பால் அழைத்தவனுக்குத் துன்பம்தர யாருக்கு மனம் வரும்?

**உ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.**

- சான்றோர்க்கு மதிப்புக் கொடுத்தால் வாழ்வில் உயரலாம்.

18. **இலக்கணக்குறிப்புத் தருக. அ) அன்பும் அறமும் ஆ) நன்கலம் இ) மறத்தல் ஈ) உலகு**

- அன்பும் அறமும் - எண்ணும்மை

www.Padasalai.Net www.CBSEtips.in



- நன்கலம் - பண்புத்தொகை
- மறத்தல் - தொழிற்பெயர்
- உலகு - ஆகுபெயர்

19. **வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?**
- இயற்சீர் வெண்டளை
- வெண்சீர் வெண்டளை

20. **ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?**
- வெண்பாவின் அனைத்து அடிகளும் ஒரே எதுகையைப் பெற்று வருவது 'ஒரு விகற்பம்' எனப்படும்.
- முதல் இரண்டு அடிகள் ஒரெதுகையாகவும், அடுத்த இரண்டு அடிகள் ஒரெதுகையாகவும் அமைவது 'இரு விகற்பம்' எனப்படும்.

21. **வெண்பாவிற்கு ஏற்ப பொருத்தமான சீரினை எடுத்து எழுதுக.**

அ) அன்பே ________________ (ஆர்வமாய் / **தகளியாய்**)
ஆ) வான்மழை ________________ (**தூறலில்** / பொழிந்திடின்)
இ) கண்ணிரண்டும் ________________ (இலாதார் / **இல்லார்**)
ஈ) வெண்ணிலவு ________________ (**காய்கிறது** / ஒளிர்கிறது)
உ) வெய்யோன் ________________ (காய்ந்திட / **ஒளிர்ந்திட**)

22. **வெண்பாவுக்கான மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.**

அ) கல்வி கரையில **கற்க**.
ஆ) கல்லாரே ஆயினும் **அன்புசெய்**.
இ) நல்லவை செய்யின் **நலமே**.
ஈ) அவமதிப்பும் ஆன்ற **பழியும்**....
உ) உண்ணாது நோற்பார் **பெரியார்**.

23. **கீழுள்ள சொற்களை ஈற்றுச் சீர்களாகக் கொண்டு குறள் வெண்பா எழுதுக.**

**அ) கடல்** : முத்தும் பவளமும் தந்திடும் சீராக
நித்தமும் கத்தும் கடல்.

**ஆ) வாள்** : காக்கும் சிறப்பின் அருமை உயிரினைப்
போக்கும் கொடியதாம் வாள்.

**இ) மழை** : ஊருக்குள் சாதி மதங்களைப் பாராமல்
யாருக்கும் பெய்யும் மழை.

**ஈ) தேன்** : பாக்கு மரத்தினில் தேன்கூடு தந்தது
நாக்கில் சுவைக்கின்ற தேன்.

**உ) மரம்** : கண்ணில் படாமல் அழிந்து வருகிறது
மண்ணில் வளர்ந்த மரம்.

24. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

**அ) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.**
- நம் மா**நி**லம் இந்த ஆண்டு வ**ற**ட்சியால் பாதிக்கப்பட்டது.

**ஆ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.**
- எங்கள் ஊரில் நூலகக் கட்**ட**டம் கட்ட அ**ர**சு நிதி ஒதுக்கியது.

**இ) ரங்கன் வெங்கலப் பாத்திரக் கடை வைத்திருக்கிறார்.**
- **இ**ரங்கன் வெ**ண்**கலப் பாத்திரக் கடை வைத்திருக்கிறார்.

**ஈ) மானம் பாத்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.**
- **வா**னம் பா**ர்**த்த பூமியில் ப**யு**று வகைகள் பயிரிடப்படுகின்றன.

**உ) ஐப்பசி அடைமழையில் ஊருனி நிரைந்தது.**
- ஐப்பசி அடைமழை**யா**ல் ஊரு**ணி** நி**றை**ந்தது.

**ஊ) இன்னிக்குச் சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.**
- இன்**றை**க்குச் சா**யும்** காலம் கபடி**ப்** போட்டி நடைபெறும்.

25. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.**

**அ) பலகை**

பலகை : என் தந்தை பலகைத் தொழில் செய்கிறார்.
பல கை : எனக்குப் பல கைத்தொழில்கள் தெரியும்.

**ஆ) தாமரை**

தாமரை : குளத்தில் தாமரை மலர்ந்தது.
தா மரை : காட்டில் தா மரையைப் பார்த்தேன் (தா மரை - தாவும் மான்).

**இ) கோவில்**

கோவில் : எங்கள் ஊரில் சிவன் கோவில் உள்ளது.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

கோ வில் : கோ வில்லோடு நிற்கும் ஓவியத்தை ஓவியர் வரைந்தார் (கோ - அரசன்).

**ஈ) வெங்காயம்**

வெங்காயம் : வெங்காயம் கிலோ 20 ரூபாய்.

வெம் காயம் : போரில் வீரர்களுக்கு வெம் காயம் ஏற்பட்டது.

**உ) தலைமை**

தலைமை : மது ஒழிப்புப் போராட்டத்தை, என் தந்தை தலைமை தாங்கி நடத்தினார்.

தலை மை : வெள்ளை முடியைக் கருப்பாக்க, தலை மை வாங்கினேன்.

26. **"மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தி இருக்கிறது" - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?**

- மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது.
- இத்தொடரில் 'உரு(நிற)ப்படிமம்' வெளிப்படுகிறது.
- ஏனெனில், இத்தொடர் வசந்தகாலத்தின் இலை, தழைகளைக் காட்சிப்படுத்துகிறது.

27. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

**அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சுக்கோ.**

- இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்து கொள்.

**ஆ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நெறையும்.**

- நிலத்தைக் கிளறிவிட வேண்டும் (அடா - அசைச்சொல்). அப்பொழுதுதான் வயிறு நிறையும்.

**இ) அன்னைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.**

- அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியதுதானே.

**ஈ) வீட்டாண்ட வெளையாண்ட கொயந்தைய அப்பா எங்க இஸ்துகினு போனாரு.**

- வீட்டின் அண்டையில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கு இழுத்துக் கொண்டு போனார்?

**உ) புள்ளைக்கு ஒடம்பு சரியில்ல மூணு நாளா சிரமப்படுது.**

- பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லை. மூன்று நாட்களாகச் சிரமப்படுகிறது.

**ஊ) ரவைக்குச் சித்தப்பனக் காவலுக்குப் போவச் சொல்.**

- இரவுக்குச் சிற்றப்பனைக் காவலுக்குப் போகச் சொல்.

28. **ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.**

அ) பூட்டிய வீட்டிலும் பூத்துச் சிரிக்கிறது **முல்லை.**

ஆ) விழும் மரங்கள்; அழியும் காடு **வழுக்கை.**

இ) அப்படியென்ன சொல்லியது காற்று; குதித்தோடுகிறது மேகம் **கூந்தல்.**

ஈ) பூத்த மலரொன்று பறக்கிறது **வண்ணத்துப்பூச்சி.**

உ) வானம் அழுகிறது; பூமி சிரிக்கிறது **மழையும் பயிரும்.**

29. **காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- காப்பியம் இரண்டு வகைப்படும்.
- அவை : பெருங்காப்பியம், சிறுகாப்பியம்.

30. **காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?**

- அகலக்கவி, மாகாவியம், கதைச்செய்யுள், விருத்தச்செய்யுள், தொடர்நடைச் செய்யுள்,
- பொருள் தொடர்நிலைச் செய்யுள், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.

31. **காப்பியம் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.**

- காதை (சிலப்பதிகாரம்),
- சருக்கம் (சூளாமணி),
- இலம்பகம் (சீவக சிந்தாமணி),
- படலம் (கம்பராமாயணம்).

32. **பாவிகம் - விளக்குக.**

- காப்பியத்தில், கவிஞர் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தையே 'பாவிகம்' என்பர்.
- 'பாவிகம் என்பது காப்பியப் பண்பே' - தண்டியலங்காரம்.
- 'பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப' - கம்பராமாயணப் பாவிகம்.

33. **அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

அ) கபிலன் திறமையானவர் என்று ______________ (குமரன்) தெரியும். (**குமரனுக்குத்**)

ஆ) நேற்று முதல் _____________ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. (**அணையின்**)

இ) உங்களுக்கு ______________ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள். (**யாரால்**)

ஈ) முருகன் _____________ (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை. (**வேகமாகச்**)

உ) நம்முடைய ____________ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும். (**தேவையின்**)

34. **பொருள் வேறுபாடு அறிந்து ஒரே தொடரில் அமைக்க.**

**அ) கலம், களம் : பாத்திரம், இடம்**

- கலத்தில் நீர் எடுத்துக் கொண்டு, கதிரடிக்கும் களத்திற்குச் சென்றாள்.

**ஆ) புல், புள் : தாவரம், பறவை**



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- புல்வெளியில் புள்ளினங்கள் பறந்து திரிந்தன.

**இ) உழை, உளை : உழைப்பு, உளைச்சல்**

- உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைத்தால், மன உளைச்சல் ஏற்படாது.

**ஈ) கான், காண் : காடு, பார்**

- கான் சூழ்ந்த பகுதிக்குச் சென்று, வனவிலங்குகளைக் காண்போம்.

**உ) ஊண், ஊன் : உணவு, இறைச்சி**

- விடுதியில் இன்றைய சிறப்பு ஊண், ஊன் உணவாகும்.

**ஊ) தின்மை, திண்மை : தீமை, வலிமை**

- பிறர் செய்யும் தின்மையை மனத்திண்மையோடு எதிர்கொள்.

35. **கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.**

**அ) சருகு, விழு, மண், அலை**

- சருகு விழுந்து மண்ணில் கிடந்தது. அலை அதனைக் கடலுக்குள் இழுத்துச் சென்றது.

**ஆ) விண்மீன், ஒளிர், எரி, விழு**

- விண்மீன் ஒளிர்ந்தது; எரிகல் விழுந்தது.

**இ) குதிரை, வேகம், ஓடு, தாவு**

- குதிரை வேகமாக ஓடியது; தாவிக் குதித்தது.

**ஈ) குழந்தை, நட, தளிர்நடை, விழு**

- குழந்தை நடந்தது; தளிர் நடையால் விழுந்தது.

**உ) திரை, காண், கைதட்டல், மக்கள்**

- திரைப்படத்தைக் காண்பதும் கைத்தட்டி உற்சாகப்படுத்துவதும் மக்களின் இயல்பு.

**ஊ) வானம், பற, நிலவு, தொடு**

- வானத்தில் பறக்கும் சக்தி இருந்தால் நிலவைத் தொடலாம்.

36. **தொன்மம் - விளக்கம் தருக.**

- தொன்மம் என்பது பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள்படும்.
- நம்ப முடியாததுபோல் தோன்றுகின்ற செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு இயங்குகின்ற பழமையான கதைகளையே 'தொன்மம்' என்பர்.

37. **பேச்சு வழக்கில், தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.**

- என்மகன், நான் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான் (இராமாயணத் தொன்மம்)
- என் மாமன் ஒரு சகுனி (பாரதத் தொன்மம்)

38. **உள்மனம் ஒரு பாற்கடல்**
**அதைக் கடைந்தால்**
**அமுதம் மட்டுமல்ல**
**ஆலகாலமும் வெளிப்படும் என்பதை**
**நீ அறிவாய் அல்லவா? - இக்கவிதையில் வெளிப் படும் தொன்மம் யாது?**

- தேவர்களும் அரக்கர்களும் அமுதத்திற்காகப் பாற்கடலைக் கடைந்தது,
- வாசுகி பாம்பு விஷத்தைக் கக்கியது - ஆகியவை இக்கவிதையில் வெளிப்படும் தொன்மங்கள் ஆகும்.

39. **மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

**அ) ஆற அமர - பொறுமையாக**

- பன்னிரண்டாம் வகுப்பிற்குப் பிறகு என்ன படிக்கவேண்டும் என்பதை ஆற அமர யோசித்து முடிவெடுக்க வேண்டும்.

**ஆ) ஆணி அடித்தாற் போல - அழுத்தம் திருத்தமாக**

- பெண் வீட்டார், "வரதட்சனை தரமாட்டோம்" என்று ஆணியடித்தாற்போலச் சொல்லிவிட்டனர்.

**இ) அகலக்கால் - பெரிய அளவில்**

- முதன்முதலாகத் தொழில் தொடங்குபவர் அகலக் கால் வைக்கக் கூடாது.

**ஈ) வழிவழியாக - முன்னோர் செய்ததையே பின்பற்றுதல்**

- முருகன் வீட்டார் வழிவழியாக விவசாயமே செய்கின்றனர்.

**உ) கண்துடைப்பு - ஏமாற்று வேலை**

- அரசியல்வாதிகள் கொடுக்கும் இலவசம் ஒரு கண்துடைப்பு நாடகமே.

40. **தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

**அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன.**

- வாழைத்தோட்டத்தில் குயில்கள் கூவிக்கொண்டும் காகங்கள் கரைந்து கொண்டும் இருந்தன.

**ஆ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.**

- முருகன் சோறு உண்டு பால் பருகினான்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**இ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டிக் கூரை அமைத்தார்.**

- கோவிந்தன் குடியிருக்க சுவர் எழுப்பிக் கூரை வேய்ந்தான்.

**ஈ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.**

- வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையும் யானைக்கன்றும் கண்டேன்.

**உ) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகளின் பொந்துகள் அமைந்திருந்தன.**

- ஆட்டுப்பட்டியைச் சுற்றிலும் எலிகளின் வளைகள் அமைந்திருந்தன.

41. **தேவையான இடங்களில் நிறுத்தக் குறிகளை இட்டு எழுதுக.**

★ **இளங்கோவடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.**

- இளங்கோவடிகள் சாத்தனாரிடம், "முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே! அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக!" எனக் கேட்டார்.

42. **குறியீட்டு உத்தியில் ஒரு புதுக் கவிதை எழுதுக.**

ஒற்றுமையாய் நான்கு பசுக்கள்
ஒன்றும் செய்யமுடியாமல் சிங்கம்;
ஒற்றுமை சிதைந்தது
ஒன்றும் பிழைக்கவில்லை.

- இதில், சிங்கம் பகைவனுக்குக் குறியீடு.

43. **'வியர்வை' கவிதையில் வெளிப்படும் குறியீடுகளைக் குறிப்பிடுக.**

இந்த
ஆதிரைப் பருக்கைகள்
வீழ்ந்ததும்
பூமிப் பாத்திரம்
அமுதசுரபி.

- இக்கவிதையில், ஆதிரைப் பருக்கை வியர்வைத்துளிக்குக் குறியீடு;
- அமுதசுரபி செழிப்புக்குக் குறியீடு.

44. **குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.**

- சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லாமல், இன்னொன்றைக் கூறிக் குறிப்பால் உணர்த்துவது குறியீட்டு உத்தியாகும்.
- சுட்டிய பொருளுக்கும் குறியீட்டு பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல்வேண்டும்.
- சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்.

45. **விடைக்கேற்ற வினா அமைக்க.**

**அ) 'குடும்பம்' என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.**

- 'குடும்பம்' என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

**ஆ) நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.**

- நடுவண் அரசு பேரிடர் மேலாண்மை ஆணையத்தை எப்போது அமைத்தது?

**இ) சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.**

- சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் எதற்கு உதவுகின்றன?

**ஈ) 1856-இல் தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.**

- தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் எங்கு, எப்போது அமைக்கப்பட்டது?

**உ) "எதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்.**

- ஆவணப்படத்தின் இலக்கணமாக கிரியோர்சன் கூறுவது யாது?

## 3.1. உறுப்பிலக்கணம்

### உறுப்பிலக்கணச் சூத்திரம்

- முதலில் வரும் உறுப்பு **பகுதி**.
- கடைசியில் வரும் உறுப்பு **விகுதி**.
- இடையில் வரும் த், ட், ற், இன்/ கிறு, கின்று/ ப், வ்/ அல், ஆ, இல் **இடைநிலை**.
- பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே வரும் மெய்யெழுத்து **சந்தி**.
- பகுதிக்கும் விகுதிக்கும் இடையே வரும் 'கு', 'அன்', 'அ' **சாரியை**.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- அடைப்புக்குள் வருவன **விகாரம்**.
- அடைப்புக்குள் வரும் அடிக்கப்பட்ட(ஆ) எழுத்து **புணர்ந்து நீங்கியது**.
- விகுதி ஏறுவதற்கு வாய்ப்பளிக்கும் மெய்யெழுத்து **எழுத்துப்பேறு**.

**இடைநிலை அறிக**:
- கிறு, கின்று = நிகழ்கால இடைநிலை
- த், ட், ற், இன் = இறந்தகால இடைநிலை
- ப், வ் = எதிர்கால இடைநிலை
- அல், ஆ, இல் = எதிர்மறை இடைநிலை

**விகுதி அறிக**:
- **அ**, (உம்) = பெயரெச்ச விகுதி
- **இ**, **உ**, (அ) = வினையெச்ச விகுதி
- **அல்**, **தல்**, **ஐ**, **கை**, **இ** = தொழிற்பெயர் விகுதி
- **க**, (இ, இய) = வியங்கோள் வினைமுற்று விகுதி
- **என்**, **ஏன்** = தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
- **அம்**, **ஆம்**, **ஓம்** = தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
- **ஆய்**, **இ**, **ஐ** = முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
- **இர்**, **ஈர்**, **மின்** = முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி
- **அன்**, **ஆன்** = ஆண்பால் வினைமுற்று விகுதி
- **அள்**, **ஆள்** = பெண்பால் வினைமுற்று விகுதி
- **அர்**, **ஆர்**, **ஓர்** = பலர்பால் வினைமுற்று விகுதி
- **து** = ஒன்றன்பால் வினைமுற்று விகுதி
- **அ** = பலவின்பால் வினைமுற்று விகுதி

**கலங்கி** = **கலங்கு** + **இ**
கலங்கு = பகுதி
இ = வினையெச்ச விகுதி

**சாற்றி** = **சாற்று** + **இ**
சாற்று = பகுதி
இ = வினையெச்ச விகுதி

**நகை** = **நகு** + **ஐ**
நகு = பகுதி
ஐ = தொழிற்பெயர் விகுதி

**சுருக்கி** = **சுருக்கு** + **இ**
சுருக்கு = பகுதி
இ = வினையெச்ச விகுதி

**எழுதி** = **எழுது** + **இ**
எழுது = பகுதி
இ = வினையெச்ச விகுதி

**பேசுவார்** = **பேசு** + **வ்** + **ஆர்**
பேசு = பகுதி
வ் = எதிர்கால இடைநிலை
ஆர் = பலர்பால் வினைமுற்று விகுதி

**விம்முகின்ற** = **விம்மு** + **கின்று** + **அ**
விம்மு = பகுதி
கின்று = நிகழ்கால இடைநிலை
அ = பெயரெச்ச விகுதி

**கொண்டு** = **கொள்(ண்)** + **ட்** + **உ**
கொள்(ண்) = பகுதி, ள் - ண் ஆனது விகாரம்
ட் = இறந்தகால இடைநிலை
உ = வினையெச்ச விகுதி

**மருட்கை** = **மருள்(ட்)** + **கை**
மருள்(ட்) = பகுதி, ள் - ட் ஆனது விகாரம்
கை = தொழிற்பெயர் விகுதி

**விளங்கி** = **விளங்கு** + **இ**
விளங்கு = பகுதி
இ = வினையெச்ச விகுதி

**வெகுளி** = **வெகுள்**+**இ**
வெகுள் = பகுதி
இ = தொழிற்பெயர் விகுதி

**ஓர்மின்** = **ஓர்** + **மின்**
ஓர் = பகுதி
மின் = ஏவல் பன்மை வினைமுற்று விகுதி

**ஈகை** = **ஈ** + **கை**
ஈ = பகுதி
கை = தொழிற்பெயர் விகுதி

**கண்டான்** = **காண்(கண்)** + **ட்** + **ஆன்**
காண்(கண்) = பகுதி, 'கண்' என மாறியது விகாரம்
ட் = இறந்தகால இடைநிலை
ஆன் = ஆண்பால் வினைமுற்று விகுதி

**செய்த** = **செய்** + **த்** + **அ**
செய் = பகுதி
த் = இறந்தகால இடைநிலை
அ = பெயரெச்ச விகுதி

**கொன்ற** = **கொல்(ன்)** + **ற்** + **அ**
கொல்(ன்) = பகுதி
ற் = இறந்தகால இடைநிலை
அ = பெயரெச்ச விகுதி

- ★ அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்
- ★ அறிந்து = அறி + த்(ந்) + த் + உ
- ★ அறுத்து = அறு + த் + த் + உ
- ★ தொழுதனர் = தொழு + த் + அன் + அர்
- ★ செய்குவீர் = செய் + கு + வ் + ஈர்
- ★ மயங்காதீர் = மயங்கு + ஆ + த் + ஈர்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

| | |
|---|---|
| ★ அடித்து = அடி + த் + த் + உ | ★ வருகிறது = வா(வரு) + கிறு + அ + து |
| ★ இடிந்து = இடி + த்(ந்) + த் + உ | ★ நினைக்கின்ற = நினை + க் + கின்று + அ |
| ★ புகுந்து = புகு + த்(ந்) + த் + உ | ★ பகைத்த = பகை + த் + த் + அ |
| ★ இருந்தாய் = இரு + த்(ந்) + த் + ஆய் | ★ பழகிய = பழகு + இ(ன்) + ய் + அ |
| ★ ஈந்த = ஈ + த்(ந்) + த் + அ | ★ பொலிந்தான் = பொலி + த்(ந்) + த் + ஆன் |
| ★ வளர்ந்த = வளர் + த்(ந்) + த் + அ | ★ வந்து = வா(வ) + த்(ந்) + த் + உ |
| ★ உயர்ந்தோர் = உயர் + த்(ந்) + த் + ஓர் | ★ வியந்து = விய + த்(ந்) + த் + உ |
| ★ களைந்து = களை + த்(ந்) + த் + உ | ★ வைத்து = வை + த் + த் + உ |
| ★ தெரிந்து = தெரி + த்(ந்) + த் + உ | ★ அமர்ந்தனன் = அமர் +த்(ந்)+ த்+அன்+அன் |
| ★ சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன் | ★ கிடந்தது = கிட + த்(ந்) + த் + அ + து |
| ★ விரும்பிய = விரும்பு + இ(ன்) + ய் + அ | ★ தந்தனர் = தா(த) + த்(ந்) + த் + அன் + அர் |
| ★ தாங்கிய = தாங்கு + இ(ன்) + ய் + அ | ★ பழித்தனர் = பழி + த் + த் + அன் + அர் |

### 3.2. புணர்ச்சி விதி

**புணர்ச்சி இலக்கணச் சூத்திரம்**

**தோன்றல்**

- ஒற்றைக் குறிலை அடுத்து வரும் மெய்யெழுத்தின் அருகில், அதே மெய்யெழுத்துத் தோன்ற - "**தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**"
- 'பூ' என்னும் சொல்லை அடுத்து மெல்லின மெய் தோன்ற - "**பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும்**"
- இரு சொற்களுக்கு இடையில் க் ச் த் ப் என்னும் மெய் எழுத்துகள் தோன்ற "**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்**"
- முதல் சொல்லின் இடையில் ட் ற் எனும் மெய்யெழுத்துகள் தோன்ற - "**நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் ட ற ஒற்றிரட்டும்**"
- யகர மெய் (ய்) தோன்ற - "**இ ஈ ஐ வழி யவ்வும்**"
- வகர மெய் (வ்) தோன்ற - "**இ ஈ ஐ வழி யவ்வும்; ஏனை உயிர்வழி வவ்வும்**"

**மாறுதல்**

- மெய்யும் உயிரும் சேர்ந்து உயிர் மெய் எழுத்தாக மாற - "**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**"
- மகர மெய் (ம்) வேறொரு மெல்லின மெய் ஆக மாற - "**மவ்வீறு வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்**"
- 'ல்' - 'ற்' ஆகவும், 'ள்' - 'ட்' ஆகவும் மாற - "**ல ள வேற்றுமையில் வலிவரின் ற ட வும் ஆகும்**"
- 'ன்" - 'ற்' ஆகவும், 'ண்' - 'ட்' ஆகவும் மாற - "**ண ன வலிவரின் ட ற வும் ஆகும்**"

**நீங்குதல்**

- கு, சு, டு, து, பு, று - இவற்றிலுள்ள 'உ' நீங்க - "**உயிர்வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும்**"
- 'மகர மெய் (ம்) நீங்க - "**மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்**"

**பண்புப் பெயர்ப் புணர்ச்சி**

- 'மை' நீங்க - "**ஈறு போதல்**"
- 'மை' நீங்கிய பிறகு, மெல்லின மெய் தோன்ற - "**இனமிகல்**"
- 'மை' நீங்கிய பிறகு, ஒரு மெய் வேறொரு மெய்யாக மாற - "**முன் நின்ற மெய் திரிதல்**"
- 'மை' நீங்கிய பிறகு, முதல் சொல்லின் முதல் எழுத்து நெடிலாக மாற - "**ஆதி நீடல்**"
- 'மை' நீங்கிய பிறகு, முதல் சொல்லின் முதல் எழுத்து 'ஐ' ஆக மாற - "**அடி அகரம் ஐ ஆதல்**"
- 'மை' நீங்கிய பிறகு, இருக்கும் மெய் எழுத்தின் அருகில் அதே மெய் எழுத்துத் தோன்ற - "**தன்னொற்று இரட்டல்**"
- 'மை' நீங்கிய பிறகு, இடையில் நிற்கும் 'உ'கரம் 'இ'கரமாக மாற - "**இடை உகரம் இ ஆதல்**"
- 'மை' நீங்கிய பிறகு, இன்னொரு எழுத்து நீங்க - "**இனையவும்**"

**புணர்ச்சி விதிகளை அறிக (பாடல்)**

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
உயிர்வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும் (ஓடும் ஓடும் ஓடும்)
தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்
பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும் (தோன்றும் தோன்றும் தோன்றும்)
இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும் (இயல்பினும்......)
ஈறு போதல் இனமிகல் முன் நின்ற மெய் திரிதலே" (ஈறு போதல்.......)

**விதிவரும் சொற்கள்**

* **ஈறுபோதல்.**

- செம்பரிதி = செம்மை + பரிதி,
  = 'ஈறு போதல்' என்னும் விதிப்படி,
  = செம்மை + பரிதி (மை - நீங்கி),
  = செம் + பரிதி,
  = செம்பரிதி.
- நன்மொழி = நன்மை + மொழி
- பெருநெறி = பெருமை + நெறி
- வெண்மதி = வெண்மை + மதி

* **ஈறுபோதல்**, * **இனமிகல்.**

- அருங்கானகம் = அருமை + கானகம்,
  = 'ஈறு போதல்' என்னும் விதிப்படி,
  = அருமை + கானகம் (மை - நீங்கி),
  = அரு + கானகம்,
  = 'இனமிகல்' என்னும் விதிப்படி,
  = அரு + கானகம் (ங் - தோன்றி),
  = அரு + ங் + கானகம்,
  = அருங்கானகம்.
- பெருங்கடல் = பெருமை + கடல்
- பெருந்தேர் = பெருமை + தேர்

* **ஈறுபோதல்**,
* **முன்நின்ற மெய்திரிதல்.**

- செந்தமிழே = செம்மை + தமிழே,
  = 'ஈறு போதல்' என்னும் விதிப்படி,
  = செம்மை + தமிழே (மை - நீங்கி),
  = செம் + தமிழே,
  = 'முன்னின்ற மெய்திரிதல்' என்னும் விதிப்படி,
  = செம் + தமிழே (ம், ந் ஆக மாறி),
  = செந் + தமிழே,
  = செந்தமிழே.
- வெங்கதிர் = வெம்மை + கதிர்
- செங்கதிர் = செம்மை + கதிர்

* **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**

- வானமெல்லாம் = வானம் + எல்லாம்
  = 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி,
  = வானம் + எல்லாம் (ம் + எ = மெ),
  = வானமெல்லாம்.
- உரனுடை = உரன் + உடை
- நாமதனை = நாம் + அதனை
- புகழெங்கே = புகழ் + எங்கே
- கடனறிந்து = கடன் + அறிந்து

* **தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**,
* **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**

- உள்ளொன்று = உள் + ஒன்று,
  = 'தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி,
  = உள் + ஒன்று (ள் - ள்ள்),
  = உள்ள் + ஒன்று,
  = 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி,
  = உள்ள் + ஒன்று (ள் + ஒ = ளொ),
  = உள்ளொன்று.
- செல்லிடத்து = செல் + இடத்து



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- முன்னுடை = முன் + உடை
- மண்ணகம் = மண் + அகம்

* **உயிர்வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும்,**
* **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**

- ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்,
  = 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி,
  = ஆங்கு + அவற்றுள் (கு = க் + உ),
  = ஆங்க் + அவற்றுள்,
  = 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி,
  = ஆங்க் + அவற்றுள் (க் + அ = க),
  = ஆங்கவற்றுள்.
- விழிப்புணர்வு = விழிப்பு + உணர்வு
- பிறகொரு = பிறகு + ஒரு
- நன்றன்று = நன்று + அன்று

* **பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்.**

- பூம்பாவாய் = பூ + பாவாய்,
  = 'பூப்பெயர் முன், இன மென்மையும் தோன்றும்' என்னும் விதிப்படி,
  = பூ + பாவாய் (ம் - தோன்றி),
  = பூ + ம் + பாவாய்,
  = பூம்பாவாய்.
- பூங்கொடி = பூ + கொடி

* **இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்.**

- எத்திசை = எ + திசை,
  = 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி,
  = எ + திசை (த் - தோன்றி),
  = எ + த் + திசை,
  = எத்திசை.
- பனித்துளி = பனி + துளி
- தலைக்கோல் = தலை + கோல்
- வினைத்திட்பம் = வினை + திட்பம்
- அத்திசை = அ + திசை

* **இ ஈ ஐ வழி யவ்வும் தோன்றும்,**
* **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**

- உன்னையல்லால் = உன்னை + அல்லால்,
  = 'இ ஈ ஐ வழி யவ்வும்' என்னும் விதிப்படி,
  = உன்னை + அல்லால் (ய் - தோன்றி),
  = உன்னை + ய் + அல்லால்,
  = 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி,
  = உன்னை + ய் + அல்லால் (ய் + அ = ய),
  = உன்னை + யல்லால்,
  = உன்னையல்லால்.
- தனியாழி = தனி + ஆழி
- ஒருமையுடன் = ஒருமை + உடன்
- ஏழையென = ஏழை + என
- கவிதையாகும் = கவிதை + ஆகும்
- தலையசைத்து = தலை + அசைத்து

* **மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்.**

- இனநிரை = இனம் + நிரை,
  = 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' என்னும் விதிப்படி,
  = இனம் + நிரை (ம் - நீங்கி),
  = இன + நிரை,
  = இனநிரை.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

## நான்கு மதிப்பெண் வினாக்கள்

### 1. செய்யுள் வினாக்கள்

**1. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்" - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- மாலை நேரக் கதிரவன் மறைகின்ற வேளையில் சிவப்பு நிறமாகத் தோன்றும்.
- எனவே, இக்கவிதைத் தொடர் கதிரவனைச் 'செம்பரிதி' எனச் சுட்டுகிறது.
- கதிரவன் மறைகின்ற போது வானம் செந்நிறமாகக் காணப்படுவதால், "வானமெல்லாம் செந்நிறத்துப் பூக்காடாம்" எனக் காட்சிப்படுத்துகிறது.
- தலையணையில் தலைவைத்து மனிதர் படுத்து உறங்குவதுபோல், கதிரவன் மலைமேட்டில் தலையைச் சாய்த்து இரவில் படுத்து உறங்கச் செல்வதாகக் கவிதையடி நமக்குக் காட்சிப் படுத்துகிறது.

**2. 'நீர் நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்' - இக்கவிதையின் அடி, 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' - என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.**

- பனித்துளிகளைக் கதிரவன் உறிஞ்சுவதாக நாட்டுப்புறப்பாடல் பாடுகிறது.
- நீர்நிலைகளில் உள்ள நீரினை கதிரவனின் ஒளிக்கதிர் உறிஞ்சுவதாக அய்யப்பமாதவன் பாடியுள்ளார்.
- அய்யப்ப மாதவன் கவிதையில் இடம்பெறும் 'இதழ்குவித்து உறிஞ்சுகிறது' என்னும் சொற்றொடர், கதிரவனுடைய வெப்ப ஆற்றலின் வீரியத்தை உணர்த்துகிறது.
- இது, கவிதை உருவான காலத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

**3. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

- வாடைக் காலத்தில் தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த கோவலர்கள், தாம் பழகிய நிலத்தை விட்டுவிட்டு வேறொரு இடத்திற்கு இடம்பெயர்ந்தனர்.
- எருமை, பசு, ஆடு ஆகிய ஆநிரைகளை மேடான நிலங்களில் மேயவிட்டனர்.
- அங்கு, பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிக் குளிரைப் போக்க முயற்சித்தனர்.
- இவ்வாறு, வாடைக் காலத்தில் கோவலர்கள் பாதுகாப்பைத் தேடினர்.

**4. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவன் வழிநின்று விளக்குக.**

- அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே பண்புடையதாகவும் பயனுடையதாகவும் அமையும்.
- அறநெறியில் நின்று வாழ்கின்றவரை, தெய்வத்திற்கு இணையாக வைத்துப் போற்றுவர்.
- முயற்சி சிறப்புடையவரைவிட, அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவர் மேம்பட்டவர்.
- எனவே, 'இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தல் அவசியம்' என்று வள்ளுவர் கூறுகிறார்.

**5. எவற்றையெல்லாம்விட நன்றி உயர்ந்தது? - குறள்வழி விளக்குக.**

- நன்றி = உதவி
- செய்யாமல் செய்த உதவி, விண்ணையும் மண்ணையும்விட உயர்ந்தது.
- உரிய காலத்தில் செய்த உதவி, இந்த உலகத்தைவிடப் பெரியது.
- பயன் எதிர்பாராமல் செய்த உதவி, கடலைவிடப் பெரியது.

**6. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.**

- சினத்தால் தீமையான விளைவுகளே ஏற்படும்.
- சினம், ஒருவருடைய முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்லும்.
- சினம், தன்னைக் கொண்டவரை அழிப்பதோடு அவருக்குத் துணையானவரையும் சேர்த்து அழித்துவிடும்.
- எனவே, ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும்.

**7. "மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.**

- கவிஞனின் எண்ணம், அதை வெளிப்படுத்தும் வண்ணம், வாசகனின் மனநிலை ஆகிய மூன்றும் மூன்றான காலம்போல் ஒன்று.
- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றும் ஒருவருடைய வாழ்வு காலத்தைக் குறிப்பிடுகையில் ஒன்றாகிறது.
- அதுபோல, கவிஞனின் எண்ணம், அதை வெளிப்படுத்தும் வண்ணம், வாசகனின் மனநிலை



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஆகிய மூன்றும் 'கவிதை' என்ற நிலையில் ஒன்றாகிறது.

8. **இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**
- "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மனிதர்களுடைய உறவு வேண்டாம்;
- ஒரு நிலைப்பட்ட மனதுடன், எப்பொழுதும் உனது திருவடிகளையே நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்"
- என்று இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் வேண்டுகிறார்.

9. **பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?**
- திருமயிலைக் கபாலீச்சரம் கோவிலில் பங்குனி உத்திரத் திருவிழா சிறப்பாக நடைபெறும்.
- அவ்விழா, எழுச்சி மிக்கதாகவும் ஆரவாரம் மிக்கதாகவும் கொண்டாடப்பெறும்.
- அவ்விழாவில், இளம்பெண்கள் ஆரவாரத்தோடு பங்கேற்பர்.
- விழாவின்போது, கபாலீச்சரம் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசைகள் செய்து வழிபடுவர்.
- இவ்வாறு பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்றதாக திருஞானசம்பந்தர் பதிவு செய்கிறார்.

10. **'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.**
- பண்டைய காலத்தில் ஒரு பொருளுக்குப் பதிலாக மற்றொரு பொருளைப் பெற்றுக் கொள்ளும் பண்டமாற்று வணிகமுறையே நிலவியது.
- இப்பண்டமாற்று வணிகத்தை அகநானூற்றுப் பாடலில் அம்மூவனார் விளக்குகிறார்.
- "நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்<br>சேரி விலைமாறு கூறலின்...." - (அகநானூறு - 140)
- உமணர் ஒருவரின் மகள், "உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக்கொள்ள வாரீரோ!" என்று தெருவில் கூவுவதாகக் கூறும் இப்பாடல், பண்டமாற்று வணிகத்தைக் கண்முன் காட்சிப்படுத்துகிறது.

11. **ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.**
- **அழுகை** : ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் உயிரிழந்தான். அவனைப் பெற்ற தாய், "ஆண்டவா! என் உயிரை எடுத்துக்கொண்டு, என் மகனுக்கு உயிர்கொடு" என்று சொல்லிக் கதறியழுதாள்.
- **பெருமிதம்** : என் தோழி சுபாஷினி, பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றாள். "அன்றன்று நடத்தப்படும் பாடங்களை நான் அன்றன்றே படித்துவிடுவேன்; அதனால்தான் என்னால் முதல் மதிப்பெண் எடுக்க முடிந்தது" என்று அவள் பெருமிதம் பொங்கக் கூறினாள்.

12. **சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.**
- சூது, ஒருவருடைய இயல்பான நற்பண்பையும் புகழையும் கெடுத்துவிடும்.
- மேலும், பரம்பரைச் செல்வத்தை அழிப்பதோடு பல்வேறு துன்பங்களையும் அது கொடுக்கும்.
- கள்ளுண்பது நஞ்சுண்பதற்குச் சமமாகும்.
- கள்ளுண்பவரை நல்லன சொல்லித் திருத்த முடியாது.
- எனவே, சூதும் கள்ளும் கேடு தரும்.

13. **அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?**
- போருக்குப் பிறகு, பிறந்த குழந்தையென மலர்ந்து சிரிக்கிறது அதிசய மலரொன்று.
- ஆட்களற்ற பொழுதில், அந்நிலத்தில் உலவிய யானைகளின் எச்சத்திலிருந்து இச்செடி முளைத்திருக்கலாம்.
- யாருடைய செருப்பின் பின்புறமோ விதையாக ஒட்டிவந்து, உயிர்பெற்று வளர்ந்திருக்கலாம் என்று தமிழ்நதி கூறுகிறார்.

14. **யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

**உவமை**
- யானை, வயலில் புகுந்து தானே உண்ணுமானால், அதன் வாயில் உட்புகுவதைக் காட்டிலும் காலால் மிதிபட்டு அழிவது அதிகமாக இருக்கும்.

**பொருள்**
- அரசன், முறை அறியாத சுற்றத்தாரோடு ஆரவாரமாகக் குடிமக்களிடம் வரி பெற்றால், அவனும் பயனடையான் நாட்டு மக்களும் துன்புறுவர்.

**பொருத்தம்**
- யானை - மன்னன்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- யானை உண்ணும் முறை - மன்னன் வரிபெறும் முறை
- யானையின் வாயில் குறைவாகவே போகும் - மன்னன் கருவூலத்தில் குறைவாகவே சேரும்

15. **கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.**

- பேகன் : குளிரில் நடுங்கிய மயிலுக்குத் தன்னுடைய ஆடையைக் கொடுத்தான்.
- பாரி : முல்லைக் கொடி படர, தன் தேரினைக் கொடுத்தான்.
- காரி : இரவலர்க்கு, இல்லை என்று சொல்லாமல் எண்ணற்ற குதிரைகளையும் செல்வங்களையும் வழங்கினான்.
- ஓரி : மலைநாட்டைக் கூத்தருக்குப் பரிசாக வழங்கினான்.
- ஆய் : ஒளிமிக்க நீலவண்ணக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடையினையும் ஆலின் கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தான்.
- அதிகன் : உயிர் நிலைபெற உதவும் அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு வழங்கினான்.
- நள்ளி : நட்பு கொண்டவர் மகிழுமாறு அனைத்துப் பொருட்களையும் குறிப்பறிந்து கொடுத்தான்.

16. **கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.**

- பேகனைப் போன்றும் பாரியைப் போன்றும், அஃறிணை உயிர்களின் மீதும் அன்பு செலுத்திக் கொடை வழங்க வேண்டும்.
- காரியைப் போன்று, இல்லையென்று வருபவர்க்கு "இல்லை" எனக் கூறாது இனிய மொழிகளுடன் கொடை வழங்க வேண்டும்.
- நள்ளியைப் போன்று, பிறரது குறிப்பறிந்து கொடை வழங்க வேண்டும்.
- அதிகனைப் போன்று, உயர்ந்த பொருளாயினும் அதனைப் பெறத் தகுதி உடையவருக்குக் கொடுக்கவேண்டும்.
- மேற்கூறியவாறு, கடையெழு வள்ளல்களைப் பின்பற்றிக் கொடையளிக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

17. **"ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்** : தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலாக இடம் பெற்றுள்ளது.

**பொருள்** : கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது சூரியன்.

**விளக்கம்** : 'கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது சூரியன்; மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவது தன்னிகரில்லாத தமிழ்' என்று தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் கூறுகிறது.

18. **"வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்** : ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளிலிருந்து என். சத்தியமூர்த்தி மொழிபெயர்த்த 'தாகம் கொண்ட மீனொன்று' என்னும் நூலில், 'விருந்தினர் இல்லம்' எனும் கவிதையில் இடம் பெற்றுள்ளது.

**பொருள்** : இல்லத்திற்கு வருபவர் எத்தகைய பண்புடையவராக இருந்தாலும், அவர் வந்ததற்கு நன்றி செலுத்து.

**விளக்கம்** : 'உன் இல்லத்திற்கு வருபவர் தீய எண்ணத்தோடு வந்தாலும், உன்னை அவமானப்படுத்த வந்தாலும், உன்னை ஏமாற்ற வந்தாலும் அவர்களை நீ வாசலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக. ஏனெனில், அவர்கள் ஒவ்வொருவரும் உனக்கு ஒரு வாழ்க்கை வழிகாட்டி. எனவே, அவர்கள் வந்ததற்கு, நீ நன்றி செலுத்து' என்று அக்கவிதை கூறுகிறது.

19. **"எங்கிருந்தோ வருகிறது**
**வண்ணத்துப்பூச்சி ஒன்று**
**பறவைகளும் வரக்கூடும் நாளை" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்** : தமிழ்நதி எழுதிய 'அதன் பிறகும் எஞ்சும்' என்னும் கவிதைத் தொகுப்பில், 'அதிசய மலர்' என்னும் கவிதையில் இடம் பெற்றுள்ளது.

**பொருள்** : மலரைத் தேடி ஒரு வண்ணத்துப்பூச்சி வருகிறது; நாளை பறவைகளும் வரக்கூடும்.

**விளக்கம்** : 'பசுமை மிகுந்த வளமான பகுதி போரினால் சாம்பலாகிறது. அந்த நிலத்தில் அதிசய மலரொன்று முளைத்திருக்கிறது. அந்த மலரைத்தேடி வண்ணத்துப்பூச்சியொன்று வருகிறது; நாளை பறவைகளும் வரக்கூடும். அந்த ஒருசெடி காடாகும்; காடு மழையைக் கொண்டுவரும்; மழை இயற்கை வளத்தைப் பெருக்கும். போரினால் சிதறிச் சென்ற மனிதரெல்லாம் மீண்டும் அங்கே வருவர்' என்று அக்கவிதை கூறுகிறது.

20. **"ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்** : எச். ஏ. கிருட்டிணனார் இயற்றிய 'இரட்சணிய யாத்திரிக'த்தில் இடம் பெற்றுள்ளது.

**பொருள்** : இறைமகன் ஓர் ஏழையைப் போல அமைதியாக நின்றார். இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

**விளக்கம்** : 'இறைமகன் தன்னைப் பிறர் கயிற்றால் கட்டும்போது அதற்கு உடன்பட்டு நின்றார்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இது சாதாரண அன்புச் செயல் அன்று. தமக்கு இழிவான செயல்களைச் செய்த அம்மனிதர்கள் பெறப்போகும் துன்பத்துக்காக இரக்கப்படு ஓர் ஏழையைப் போல அமைதியாக நின்றார். இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்' என்று எச். ஏ. கிருட்டிணன் கூறுகிறார்.

## 2. உரைநடை வினாக்கள்

**1. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

**ஒலிக்கோலம்**

- இசையோடும் இசைக்கருவியோடும்தான் கவிதை பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்த கவிதை கலைவடிவம் கொள்கிறது.
- இதனையே அந்தக் கவிதையின் ஒலிப்பின்னல் (ஒலிக்கோலம்) என்கிறோம்.
- இப்பண்பைச் சங்கப் பாடல்கள் பலவற்றில் காணலாம்.

**சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம்**

- வன்மையான உணர்ச்சியைக் காட்ட க, ட, த, ற.
  "கடந்தடு தானை மூவிரும் கூடி
  உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கு அரிதே;" (புறம் - 110)
- ஒலிக்கோலமிடும் நெடில் ஒலிகள்
  "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை
  கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம் - 145)

**2. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

- குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால் வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள் போன்றவற்றை அழித்துக் கட்டிடங்களைக் கட்டக்கூடாது.
- ஆற்றில் அளவுக்கு அதிகமாக மணல் அள்ளக்கூடாது.
- அவ்வாறு மணல் அள்ளுவதால், வெள்ளச் சமவெளிகள் அழிந்து போகின்றன.
- நீர்நிலைகளைத் தூர்வாரி முறையாகப் பராமரிக்க வேண்டும்.
- நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.
- சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

**3. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.**

- நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23-ஆம் நாள் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
- புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.
- இதற்காகவே பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.
- மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்து பேரிடர் காலங்களில் செயலாற்ற பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.

**4. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.**

- சங்ககாலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவுபெற்று பெற்றோருடன் வாழும் விரிந்த குடும்ப அமைப்புமுறை உருவானது.
- கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப முறையை ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.
- விரிந்த குடும்பம் பற்றிய இக்கருத்தினைத் தொல்காப்பியமும் பதிவு செய்கிறது.
- இத்தகைய தொன்மைமிக்க விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம்.

**5. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில், குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?**

- குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளைச் சமாளிக்க, தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்பப் பணிகளை அனைவரும் பகிர்ந்து கொள்வது அவசியமாகிறது.
- நானும், எனது வீட்டுப்பாடங்களைச் செய்வதோடு, என் தம்பி - தங்கையர் வீட்டுப்பாடங்கள் செய்வதற்கு உறுதுணையாக இருப்பேன்.
- எனது உடைகளை நானே துவைத்துச் சலவை செய்து கொள்வேன்.
- நான் சாப்பிடப் பயன்படுத்தும் தட்டு முதலான பொருட்களை நானே கழுவிச் சுத்தம் செய்வேன்.
- வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருப்பதில் அம்மாவுக்கு உதவி செய்வேன்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

6. **நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?**
- நான் ஆசிரியரானால்.........
- மாணவர்களைப் பெயர் சொல்லி அழைக்கமாட்டேன்.
- தம்பி, தங்கை என்றுதான் அழைப்பேன்.
- இதன் மூலம், ஆசிரியர் - மாணவர் இடைவெளியைக் குறைத்து நெருக்கத்தை அதிகரிப்பேன்.
- மாணவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு கற்பித்தல் பணியை மேற்கொள்வேன்.
- நூல் பாடங்களைக் கற்பிப்பதோடு வாழ்க்கைப் பாடங்களையும் இணைத்துக் கற்பிப்பேன்.
- மாணவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்திக்கொள்ளும் வகையில் சின்ன சின்ன தண்டனைகள் வழங்குவேன்.

7. **மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.**
- பழங்காலத்தில், பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகினார்கள்.
- ஆசிரியர் முதலில் தரையில் எழுத, அதன்மேல் பிள்ளைகள் சொல்லியபடி எழுதினர்.
- அதன்பிறகு, எழுத்தாணி மூலம் ஓலைச்சுவடிகளில் எழுதினர்.
- பனையோலை, தாழைமடல் போன்றவற்றை ஆசிரியரே ஒழுங்குசெய்து கொடுப்பதுண்டு.
- அன்றைய மாணவர்கள் மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி ஆகிய எழுத்தாணிகளைப் பயன்படுத்திச் சுவடிகளில் எழுதினர்.
- காலப்போக்கில் மணலில் எழுதுவது மறைந்துவிட்டது ஓலைச்சுவடிகள் ஒழிந்து போயின.
- தற்காலத்தில், காகிதத் தாள்களும் பலவண்ண மைப்பேனாக்களும் எழுதுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

8. **சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**
- இந்திய சாரசனிக் கட்டடக் கலைப்பாணியில் கட்டப்பட்ட எழும்பூர் தொடர்வண்டி நிலையம்
- தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை அறிய உதவும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
- தென்னிந்திய வரலாற்றை அறிய உதவும் எழும்பூர் அருங்காட்சியகம்
- இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம்
- தென்னிந்திய திரைப்படத் துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய கோடம்பாக்கம்

ஆகியவை சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக இன்றும் நிலைத்திருக்கின்றன.

9. **திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**
- காட்சி என்பது கதை நகர்வுக்கு உதவுவது.
- திரைப்படத்தின் காட்சிகள் சிறப்பாக அமைந்தால் வசனத்திற்குக் கூட இரண்டாம் இடம்தான்.
- முதல் காட்சியில் தோழி ஒருத்தி கதாநாயகியிடம் தொடர்வண்டிப் பயணச்சீட்டைக் கொடுப்பாள்;
- அடுத்த காட்சியில் கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்;
- "எண் 7, வீரய்யா தெரு....." என்று ஒருவர் முகவரியைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அந்த முகவரியில் சென்று காட்சி நிற்கும்.
- இவ்வாறு, மூன்று மணி நேரக் கதையை மூன்றே நிமிடங்களில் காட்சிப்படுத்த முடியும்.
- மேலும், ஒருவரின் கட்டுப்படுத்த முடியாத கோபத்தைக் காட்சிப்படுத்த, அவர் கத்திக் கூச்சல் போடுவதைக் காட்டவேண்டிய அவசியமில்லை.
- மாறாக, அவர் கையில் பிடித்திருக்கும் கண்ணாடிக் குவளையை இறுகப் பிடித்து உடைப்பதைக் காட்டினால் போதும். இதைத்தான் காட்சியின் ஆற்றல் என்பர்.

10. **வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**
- ★ வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு.
  - சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்
  - உரிய நேரத்தில் விதைத்தல்
  - நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்
  - அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்
  - உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல்
- ★ என ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் அவசியம்.
- ★ மேலும் நிலத்தை மனைவி எனவும், அதில் வளரும் பயிரைக் குழந்தை எனவும் பாவித்துப் பராமரித்தால், வேளாண்மையிலும் மேன்மை பெற்று விளங்கலாம்.

8. **மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.**
- தமையன் தமிழாசிரியராகவும் தந்தை மருத்துவராகவும் இருந்ததால், மயிலை சீனி. வேங்கடசாமி தமிழ்மீது தனியாத பற்று மிக்கவராகத் திகழ்ந்தார்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- தந்தையின் சித்த மருத்துவப் பின்புலம், தமையனாரின் தமிழ்ப் பின்புலம் ஆகியவையே அவரை வரலாற்று ஆய்வாளராக உருவாக்கியது.
- தமிழின் தொல் இலக்கியம், தொல் கலை, தொல் எழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாகப் 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' ஆகிய நூல்களை இயற்றினார்.
- சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழி ஆய்வு முதலான பல துறைகளிலும் இவர் கவனம் செலுத்தினார்.
- இவர் எழுதிய 'தமிழர் வளர்த்த அழகு கலைகள்' என்னும் நூல், கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூல் ஆகும்.
- திருமணமே செய்து கொள்ளாமல் இல்லறத் துறவியாக வாழ்ந்து, நமது அடையாளங்களை மீட்டுத் தந்த மாபெரும் மனிதரவர்.

## 3. இலக்கணம் மொழிப்பயிற்சி வினாக்கள்

### 3.1. அணிகள்

**1. பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம்** : இருவேறு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை முதலில் கூறி, பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி.

**சான்று** : ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னே ரிலாத தமிழ். - (தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்)

**பொருத்தம்**

**ஒற்றுமை** : கதிரவனும் தமிழும் இருளைப் போக்குகின்றன.

**வேற்றுமை** : கதிரவன், உலகின் புற இருளைப் போக்குகிறது.
தமிழ், மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குகிறது.
எனவே, கதிரவனைவிடத் தமிழே உயர்ந்தது.

**2. நிரல் நிறை அணியைச் சான்று தந்து விளக்குக.**

**அணி விளக்கம்** : சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே பொருள் கொள்ளச் செய்வது நிரல்நிறை அணி.

**சான்று** : அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**பொருத்தம்** : 'அன்பும் அறனும் உடைய இல்வாழ்க்கை,
பண்புடையதாகவும் பயன் மிக்கதாகவும் அமையும்'
என வரிசை முறைப்படி பொருள் கொள்ளப்படுவதால், இது நிரல்நிறை அணி ஆயிற்று.

**3. ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம்** : ஒரு பொருளை உருவகம் செய்து, அதற்கு இணையான மற்றொரு பொருளை உருவகம் செய்யாது விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி.

**சான்று** : சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**பொருத்தம்** : சினத்தை நெருப்பாகவும் இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார்.

**4. தொழில் உவமையணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம்** : ஒரு பொருளின் தொழில் அல்லது செயல் காரணமாக அமையும் உவமை, தொழில் உவமை எனப்படும்.

**சான்று** : அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

**பொருத்தம்** : இக்குறளில் 'தீக்காய்தல்' என்னும் செயல் (தொழில்), அரசரோடு பழகுவதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, இது தொழில் உவமையணி.

**5. உவமையணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம்** : உவமை ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைந்து, உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி.

**சான்று** : உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.

**பொருத்தம்**

**உவமை** : குடங்கருள் பாம்போடு உடனுறைதல்

**உவமேயம்** : உடம்பாடு இலாதவர் வாழ்க்கை

**உவம உருபு** : அற்று



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

6. **எடுத்துக்காட்டு உவமையணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம்** : உவமை ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைந்து, உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி.

**சான்று** : துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

**பொருத்தம்** :
**உவமை** : துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்
**உவமேயம்** : நஞ்சுண்பார் கள்ளுண் பவர்
**உவம உருபு** : மறைந்து வந்துள்ளது

7. **சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.** (2)

**அணி விளக்கம்** : செய்யுளில், வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, தந்த பொருளையே தருவது சொற்பொருள் பின்வருநிலையணி.

**சான்று** 1 : எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

**பொருத்தம்** : இக்குறளில், 'பொருள்' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து, 'கருத்து' எனத் தந்த பொருளையே தருகிறது.

**சான்று** 2 : எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

**பொருத்தம்** : இக்குறளில், 'எண்ணிய' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து, 'நினைத்த' எனத் தந்த பொருளையே தருகிறது.

## 3.2. திணை, துறை

1. **வாகைத் திணையைச் சான்றுடன் விளக்குக.**

**திணை விளக்கம்** : வெற்றிபெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத்திணை.

**சான்று** : வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடு இதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க.... (நெடுநல்வாடை)

**பொருத்தம்** : 188 அடிகளைக் கொண்ட இப்பாடல், பாண்டியன் நெடுஞ்செழியனின் வெற்றியைப் பாடுகிறது; எனவே, வாகைத்திணைக்குச் சான்றாயிற்று.

2. **பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.**

**திணை விளக்கம்** : ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணை.

**சான்று** : வாயிலோயே! வாயிலோயே!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழிப் வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்? (புறநானூறு - 206)

**பொருத்தம்** : இப்பாடலில், "நெடுமான் அஞ்சி தன் அறியலன் கொல்?" என்ற கூற்று அதியமானின் கொடைத்திறத்தைப் புலப்படுத்துகிறது; எனவே, பாடாண் திணைக்குச் சான்றாயிற்று.

3. **நெய்தல் திணையைச் சான்றுடன் விளக்குக.**

**திணை விளக்கம்** : கடல் சார்ந்த பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுவது நெய்தல் திணை.

**சான்று** : பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி...... (அகநானூறு - 140)

**பொருத்தம்** : நிலம் : பெருங்கடல்
மக்கள் : பரதவர்
தொழில் : பெருங்கடல் வேட்டம்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



முதலிய கடல் சார்ந்த மக்களின் வாழ்வியல் கூறுகள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன; எனவே, நெய்தல் திணைக்குச் சான்றாயிற்று.

4. **கூதிர்ப் பாசறைத் துறையைச் சான்றுடன் விளக்குக.**

**துறை விளக்கம்** : போர்மேற் சென்ற அரசன், குளிர்காலத்தில் தங்கும் படைவீடு பற்றிக் கூறுவது கூதிர்ப் பாசறைத் துறை.

**சான்று** : வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடு இதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க.... (நெடுநல்வாடை)

**பொருத்தம்** : 188 அடிகளைக் கொண்ட இப்பாடல், பாண்டியன் நெடுஞ்செழியன் போரின்போது அமைத்த படைவீடு பற்றிக் கூறுகிறது; எனவே, கூதிர்ப் பாசறைத் துறைக்குச் சான்றாயிற்று.

5. **பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.**

**துறை விளக்கம்** : பரிசு வேண்டி வாயிலில் நிற்பது பரிசில் துறை.

**சான்று** : வாயிலோயே! வாயிலோயே!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழிப் வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்? (புறநானூறு - 206)

**பொருத்தம்** : பரிசு கிடைக்கச் சற்றுத் தாமதம் ஏற்படவே, வாயிற் காவலனிடம் ஔவையார் வாதம் செய்கிறார். எனவே, இப்பாடல் பரிசில் துறைக்குச் சான்றாயிற்று.

6. **செவியறிவுறூஉத் துறையைச் சான்றுடன் விளக்குக.**

**துறை விளக்கம்** : அரசன் செய்யவேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அறிவுறுத்துவது செவியறிவுறூஉத் துறை.

**சான்று** : காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும் பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்.... (புறநானூறு - 184)

**பொருத்தம்** : மக்களிடம் வரிபெறும் முறைபற்றி பாண்டியன் அறிவுடைநம்பிக்குப் பிசிராந்தையார் அறிவுரை கூறுகிறார். எனவே, இப்பாடல் செவியறிவுறூஉத் துறைக்குச் சான்றாயிற்று.

3.3. **பாநயம் பாராட்டல்**

| | |
|---|---|
| 1. முச்சங்கம் கூட்டி<br>முதுபுலவர் தமைக் கூட்டி<br>அச்சங்கத் துள்ளே<br>அளப்பரிய பொருள் கூட்டி<br>சொற்சங்க மாகச்<br>சுவைமிகுந்த கவி கூட்டி<br>அற்புதங்க ளெல்லாம்<br>அமைத்த பெருமாட்டி!<br>- **கண்ணதாசன்.** | **மையக்கருத்து**: பொருள் நிறைந்த இலக்கியங்களைப் படைத்துக் கொண்டு, புதுப்பொலிவுடன் திகழ்கிறாள் தமிழ்ப் பெருமகள்.<br>**எதுகை**: மு**ச்**சங்க, அ**ச்**சங்க / சொ**ற்**சங்க, அ**ற்**புதங்க<br>**மோனை**: **மு**ச்சங்க, **மு**துபுலவர் / **அ**ச்சங்க, **அ**ளப்பரிய<br>**இயைபு**: தமைக்**கூட்டி**, பொருள்**கூட்டி**, கவி**கூட்டி**<br>**அணி**: சொற்பொருள் பின்வருநிலையணி (கூட்டி)<br>**சுவை**: பெருமிதச் சுவை |
| 2. வெட்டி அடிக்குது மின்னல் - கடல்<br>வீரத் திரைகொண்டு விண்ணை இடிக்குது;<br>கொட்டி இடிக்குது மேகம் - கூ<br>கூவென்று விண்ணைக் குடையுது காற்று;<br>சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று<br>தாளங்கள் கொட்டி கணைக்குது வானம்;<br>எட்டுத் திசையும் இடிய - மழை<br>எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!<br>- **பாரதியார்.** | **மையக்கருத்து**: எட்டுத் திசையும் இடிந்து விழுவது போல் மழை வந்தது.<br>**எதுகை**: வெ**ட்**டி, கொ**ட்**டி, ச**ட்**ட, எ**ட்**டு<br>**மோனை**: **வெ**ட்டி, **வீ**ரத்<br>**எ**ட்டு, **எ**ங்கனம்<br>**முரண்**: இடிக்குது × குடையுது<br>**சந்தம்**: சிந்துப்பா<br>**சுவை**: வீரச்சுவை |



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | |
|---|---|
| 3. பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி<br>பிற மொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க<br>ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்<br>உலகத்தில் தமிழ் மொழிக்கு நிகரும் உண்டோ?<br>கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று<br>கம்பனோடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்<br>தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட<br>தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.<br>- **நாமக்கல் கவிஞர்** | **மையக்கருத்து**: தமிழரின் அகக் கண்ணைத் திறந்து விட்ட பாரதி ஓர் ஆசான்.<br>**எதுகை**: பெ**ற்**றெடுத்த, ஊ**ற்**றெடுத்தே<br>க**ற்**றுணர்ந்தே, தெ**ற்**றெனநம்<br>**மோனை**: **க**ற்றுணர்ந்தே, **க**ம்பனொடு<br>**முரண்**: சிறப்பளித்த × பின்னால் தள்ளி<br>**அணி**: உருவக அணி (தமிழ்த் தாய், பாரதி ஓர் ஆசான்)<br>**சந்தம்**: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்<br>**சுவை**: பெருமிதச் சுவை |
| 4. பிறப்பினால் எவர்க்கும் - உலகில்<br>பெருமை வாராதப்பா!<br>சிறப்பு வேண்டுமெனில் - நல்ல<br>செய்கை வேண்டுமப்பா!<br>நன்மை செய்பவரே - உலகம்<br>நாடும் மேற்குலத்தார்!<br>தின்மை செய்பவரே - அண்டித்<br>தீண்ட ஒண்ணாதார்!<br>- **கவிமணி தேசிக விநாயகம்**. | **மையக்கருத்து**: பிறப்பினால் பெருமையில்லை; சிறந்த செயல்களால் தான் பெருமை.<br>**எதுகை**: பி**ற**ப்பினால், சி**ற**ப்பு / ந**ன்**மை, தி**ன்**மை<br>**மோனை**: **பி**றப்பினால், **பெ**ருமை / **சி**றப்பு, **செ**ய்கை<br>**ந**ன்மை, **நா**டும் / **தி**ன்மை, **தீ**ண்ட<br>**இயைபு**: வாராத**ப்பா**, வேண்டும**ப்பா**<br>**முரண்**: நன்மை × தின்மை<br>**சந்தம்**: கலித்துறை<br>**சுவை**: வெகுளிச் சுவை |
| 5. அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்;<br>அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்.<br>பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்ததுண்டோ?<br>பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்<br>சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்<br>சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி<br>இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்<br>எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணம் தானோ?<br>- **பாரதிதாசன்**. | **மையக்கருத்து**: இயற்கை அன்னை குளிரேற்றி ஒளியூட்டி நிலவை அழகு படுத்தினாள்.<br>**எதுகை**: அ**ந்**தியிருளாற், பி**ந்**தியந்த,<br>சி**ந்**தாமல், இ**ந்**தாவென்<br>**மோனை**: **அ**ந்தியிருளால், **அ**வ்வாறே<br>**முரண்**: காரிருள் × ஒளி<br>**அணி**: உருவக அணி (ஒளி முத்து, இயற்கை அன்னை)<br>**சந்தம்**: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்<br>**சுவை**: உவகைச் சுவை |
| 6. பூமிச்சருகாம் பாலையை - முத்துப்<br>பூத்த கடல்களாக்குவேன்<br>புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்<br>புதிய தென்றலாக்குவேன்<br>இரவில் விண்மீன் காசினை - செலுத்தி<br>இரவலரோடு பேசுவேன்<br>இரவெரிக்கும் பரிதியை - ஏழை<br>விறகெறிக்க வீசுவேன்.<br>- **நா. காமராசன்**. | **மையக்கருத்து**: எழில்மிகு இயற்கையை மனித வாழ்விற்கு உதவும் வகையில் மாற்றுவேன்.<br>**எதுகை**: இ**ர**வில், இ**ர**வெரிக்கும்<br>இ**ர**வில், இ**ர**வலரோடு<br>**மோனை**: **பூ**மிச்சருகாம் **பு**யலை<br>**இயைபு**: பே**சுவேன்**, வீ**சுவேன்**<br>**முரண்**: பேசுவேன் × வீசுவேன்<br>**அணி**: உருவக அணி (பூமிச்சருகு, விண்மீன் காசு)<br>**சந்தம்**: சிந்துப்பா |
| 7. வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்<br>மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்<br>கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்<br>கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்<br>தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்<br>செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்<br>கூனலிளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்<br>குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே.<br>- **திரிகூடராசப்பக் கவிராயர்**. | **மையக்கருத்து**: பல்வேறு சிறப்புகளால் பெருமை வாய்ந்தது திரிகூடமலை.<br>**எதுகை**: வா**ன**ரங்கள், கா**ன**வர்கள்,<br>தே**ன**ருவி, கூ**ன**லினம்<br>**மோனை**: **கா**னவர்கள், **க**மனசித்தர்<br>**இயைபு**: அழை**ப்பார்**, விளை**ப்பார்**<br>**அணி**: உயர்வு நவிற்சி அணி<br>**சந்தம்**: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்<br>**சுவை**: பெருமிதச் சுவை |

3.4. **தமிழாக்கம் தருக**.

1. Learning is a treasure that will follow its owner everywhere.
   - ➢ கற்றல் என்பது கருவூலம். அது, நீ செல்லும் இடமெல்லாம் உன்னைத் தொடரும்.
2. A new language is a new life.
   - ➢ ஒரு புதிய மொழியைக் கற்பது என்பது புதிய வாழ்வைத் தொடங்குவது.
3. If you want people to understand you speak their language.
   - ➢ மக்கள் உன்னைப் புரிந்து கொள்ள விரும்பினால், அவர்கள் மொழியில் நீ பேசு.
4. Knowledge of languages is the doorway to wisdom.
   - ➢ மொழிகள் பற்றிய அறிவு ஞானத்தின் வாயில்.
5. The limits of my language are the limits of my world.
   - ➢ என் மொழியின் எல்லைகள்தான் என் உலகத்தின் எல்லைகள்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

## 3.5. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுதல்

### 1. யானைக்கும் அடி சறுக்கும்.

**பழமொழி விளக்கம்**

பெருவலிமை பெற்றவரும் சில நேரம் தோல்வி அடைவார். ஆம், தம் வலிமையின் மீது கொண்ட அதீத நம்பிக்கை தோல்வியைத் தரும்.

**வாழ்க்கை நிகழ்வு**

நான் ஆறாம் வகுப்பில் படிக்கத் தொடங்கியது முதலே பல பேச்சுப் போட்டிகளில் பேசத் தொடங்கிவிட்டேன். இப்பொழுது நான் மேல்நிலை இரண்டாம் ஆண்டு படிக்கிறேன். பள்ளி அளவிலான போட்டிகள், வட்டார அளவிலான போட்டிகள், மாவட்ட அளவிலான போட்டிகள், மாநில அளவிலான போட்டிகள் என அனைத்திலும் முதல் பரிசை வென்று நான் படித்த பள்ளிக்குப் பெருமை சேர்த்தேன்.

கடந்த ஜனவரி மாதம் எங்கள் பள்ளியில் நடைபெற்ற 'இலக்கிய மன்ற நிறைவு விழா'வில், 'ஒரு நாள் போதுமா?' என்னும் தலைப்பில் பேச்சுப்போட்டி நடந்தது. அப்போட்டியில், நானும் பங்குபெற்றுப் பேசினேன். ஆனால் எனக்கே புரிந்து விட்டது; நான் சரியாகப் பேசவில்லையென்று. எனினும், ஏதாவது ஒரு பரிசு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் மதிப்பீட்டாளர்கள் அறிவிப்புக்காகக் காத்திருந்தேன். ஒரு பரிசும் கிடைக்கவில்லை. மதிப்பீட்டாளர் ஒருவர் என்னை அழைத்து, "தம்பி, நீ நன்றாகப் பேசுவாயே! இன்று தலைப்பைப் புரிந்துகொள்ளும்முன் பேச வந்துவிட்டாய் என நினைக்கிறேன். 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பது இதுதான். கவலைப்படாதே, தொடர்ந்து முயற்சி செய்; வெல்வாய்" என்றார்.

### 2. தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

**பழமொழி விளக்கம்**

நாம் பிறருக்கு நன்மை செய்தால் நமக்கும் நன்மையே கிடைக்கும்; தீமை செய்தால் தீமையே கிடைக்கும். ஆம், ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர் வினை உண்டு.

**வாழ்க்கை நிகழ்வு**

நான் பதினோராம் வகுப்புப் படிக்கும்பொழுது முருகன் என்பவன் என் வகுப்புத் தோழன். அவன் நன்றாகப் படிக்கக் கூடியவன். ஆனால், தன்னைவிட யாரும் அதிக மதிப்பெண் எடுத்துவிடக்கூடாது என்று எண்ணுபவன். ஆண்டுத் தேர்வு சமயத்தில் பள்ளியில் நடைபெற்ற சிறப்பு வகுப்பில் அனைத்து மாணவர்களும் விறுவிறுப்பாகப் படித்துக் கொண்டிருந்தனர். அப்போது, "பதினோராம் வகுப்பு மதிப்பெண் எதற்கும் பயன்படுவதில்லை. அதனால், நாம் இப்படி விழுந்து விழுந்து படிக்க வேண்டியதில்லை" என்று சக மாணவர்களிடம் சொல்லிக்கொண்டு பள்ளியில் அவன் படிக்கவே இல்லை. ஆனால், வீட்டிற்குச் சென்று இரவு முழுக்கக் கண்விழித்துப் படித்தான்.

முருகனுடைய குணத்தைத் தெரிந்து கொண்ட நாங்கள் அவனிடம் பேசுவதைத் தவிர்த்துப் படிப்பதில் கவனம் செலுத்தினோம். ஒவ்வொரு தேர்விலும் முருகன் தூக்கமின்மை காரணமாகச் சோர்வுடன் காணப்பட்டான். மற்ற மாணவர்கள் அனைவரும் சுறுசுறுப்புடனும் ஆர்வத்துடனும் தேர்வெழுதினர். கணிதம் மற்றும் உயிரியல் தேர்வுகளில் அரை மணி நேரத்தை அவன் தூங்கியே கழித்து விட்டான். தேர்வு முடிவு வந்தது. எப்போதும் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களில் வரும் முருகன், ஆண்டுத் தேர்வில் பதினேழாம் இடமே பிடிக்க முடிந்தது. அப்பொழுது ஒரு மாணவன், "வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்" என்று முருகன் காதில் விழுமாறு சொன்னான்.

### 3. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

**பழமொழி விளக்கம்**

பிறருடைய குற்றம் குறைகளையே நோக்கிக்கொண்டிருந்தால், நமக்கு உறவினர்களே இருக்க மாட்டார்கள். ஆம், நன்றல்லதை அன்றே மறப்பது நன்று.

**வாழ்க்கை நிகழ்வு**

எங்கள் குடும்பம் கூட்டுக்குடும்பம். அம்மா, அப்பா, தம்பி, சித்தி, சித்தப்பா, அவர்கள் குழந்தைகள் என அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தோம். நான் பத்தாம் வகுப்புப் படிக்கும்போது, ஒரு நிலத்தை விற்பது தொடர்பாக என் தந்தைக்கும் சித்தப்பாவுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. உடனே பாகப்பிரிவினை நடந்தது; கூட்டுக்குடும்பம் தனிக்குடும்பம் ஆனது.

அன்று முதல் எங்கள் குடும்பத்தில் சின்னச் சின்ன சண்டைகள் அவ்வப்போது வந்து செல்லும். ஒரு நாள் என் சிறிய தந்தை ஒரு சாலை விபத்தில் படுகாயம் அடைந்தார். அவருக்கு யாரேனும் இரத்தம் கொடுத்தால்தான் காப்பாற்றலாம் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். இதை அறிந்த என் தந்தை உடனே மருத்துவமனை சென்று இரத்தம் கொடுத்து என் சிறிய தந்தையைக் காப்பாற்றினார். அன்று இரவு எங்கள் வீட்டிற்கு வந்த என் அத்தை, "நம்மிடம் எப்படியெல்லாம் பேசினான்! அவனுக்கு இரத்தம் கொடுப்பதா?" என்று சண்டை போட்டார். அதற்கு என் தந்தை, "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்றார்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. **எறும்பு ஊரக் கல்லும் தேயும்.**

**பழமொழி விளக்கம்**

சிறிது சிறிதாகத் தொடர்ந்து முயன்றால், பெரிய இலக்கையும் அடைய முடியும். ஆம், முயன்றால் முடியாதது இல்லை.

**வாழ்க்கை நிகழ்வு**

நான் படிக்கும் பன்னிரண்டாம் வகுப்பில் ஒரு மாணவன் பெயர் வல்லரசு. அவன் எப்பொழுதும் ஆசிரியர் சொல் பேச்சு கேட்கமாட்டான். எந்த ஆசிரியருக்கும் அவனைப் பிடிக்காது; "நீ எங்கே உருப்படப் போகிறாய்?" என்று சொல்லி அனைவரும் திட்டிக் கொண்டே இருப்பர். ஆனால், தமிழாசிரியர் மட்டும் அவன்மீது அன்பு செலுத்தினார். அவரையும் வல்லரசு கேலி செய்வான். ஒவ்வொரு முறை அவன் தவறு செய்யும்போதும், அவனைத் தனியே அழைத்துத் தமிழாசிரியர் பேசுவார். அதையெல்லாம் அவன் பொருட்படுத்தவே மாட்டான். இவ்வாறு ஆறு மாதம் கடந்தது.

எந்த ஒரு பாடத்திலும் தோல்வியையே தழுவும் வல்லரசு, அரையாண்டுத் தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றுவிட்டான். அதன் பிறகு அவனுடைய நடவடிக்கையிலும் மாற்றம் தெரிந்தது. அதற்கான காரணத்தை நான் அவனிடம் கேட்டேன். "தமிழாசிரியர் என்னை மனிதனாக்கிவிட்டார்; கண்டிப்பாக இனி எந்த ஆசிரியர் மனதையும் புண்படுத்தாமல் நன்றாகப் படிப்பேன்" என்று அவன் கூறினான். எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. 'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' என்பதுபோல, தமிழாசிரியர் தம் அன்புமொழியால் அவனுடைய பாறை மனதைப் பக்குவப் படுத்திவிட்டார்.

5. **ஊழி பெயரினும் தாம் பெயரார்.**

**பழமொழி விளக்கம்**

இந்த உலகமே அழியும் நிலை ஏற்பட்டாலும், சான்றோர் தாம் கொண்ட கொள்கையில் மாறமாட்டார். ஆம், கொள்கை உயிரினும் மேலானது.

**வாழ்க்கை நிகழ்வு**

என் அம்மாவின் பெயர் அன்புச்செல்வி; பெயருக்கேற்றபடி அனைவரிடமும் அன்பாகப் பழகுவார். அவர் வருவாய் ஆய்வாளராகப் (REVENUE INSPECTOR) பணியாற்றுகிறார். அவர், தம் பணியை நேர்மையாகவும் தூய்மையாகவும் செய்ய விரும்புவார். அதனால், தனக்குக் கீழ் பணிபுரியும் அலுவலர்களிடம் "யாரிடமும் கையூட்டுப் பெறக்கூடாது; பொதுமக்களின் விண்ணப்பங்களை நேர்மையாகப் பரிசீலிக்க வேண்டும்" என்று அறிவுறுத்துவார்.

அவருடைய நேர்மையும் தூய்மையும் அவருக்கு மட்டுமல்ல, அவர் சார்ந்த எங்கள் குடும்பத்துக்கும் துன்பத்தையே தந்தது. நான் ஆறாவது படித்தது முதல் இன்று வரை, என்னம்மா ஆறுமுறை இடமாறுதல் ஆகிவிட்டார்; நானும் நான்கு பள்ளிகள் மாறிவிட்டேன். நான் ஒருநாள் அம்மாவிடம், "அம்மா! நீயும் மற்றவரைப் போல் இருந்துவிட்டால், நமக்கு இந்த துன்பங்கள் இல்லையே?" என்று கேட்டேன். அதற்கு அவர், "நமக்கு ஏற்படும் துன்பங்களுக்காக, கொண்ட கொள்கையிலிருந்து மாறுபடக்கூடாது" என்று கூறினார். 'ஊழி பெயரினும் தாம்பெயரார்' என்ற பழமொழிக்கு இலக்கணமாக வாழும் என் அம்மாவை நினைத்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

3.6. **குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடி.**

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள், கவிமணி)

அ) கவிஞர்; ஈற்றிரு எழுத்தால் அணிகலன் செய்யலாம் ____________.

ஆ) தமிழ்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும் _____________.

இ) சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம் _____________.

ஈ) முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்துத் தமிழ் மாதம் ____________.

உ) தமிழறிஞர்; முதலிரு எழுத்துக்களால் மறைக்கலாம் _____________.

➢ **அ) கவிமணி, ஆ) தமிழ் ஒளி, இ) புதுமைப்பித்தன், ஈ) கோதை, உ) மறைமலை அடிகள்**

## ஆறு மதிப்பெண் வினாக்கள்

1. **செய்யுள் வினாக்கள்**

1. **நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.**

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நக்கீரர் இயற்றிய நூல் 'நெடுநல்வாடை'. இது, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று; 188 அடிகளைக் கொண்டது. இதில், நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைக் காண்போம்.

**புதிய மழை**

மேகமானது, தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து உலகமே குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருகியது.

**ஆயர்களின் வருத்தம்**



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த ஆயர், தாம் பழகிய நிலத்தை விட்டு இடம்பெயரும் நிலை ஏற்பட்டதால் வருத்தமடைந்தனர்; எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களுக்குக் கொண்டு சென்று மேயவிட்டனர்.

**கடுமையான குளிர்**

ஆயர், தம் தலையில் சூடியிருந்த காந்தல் மலர் கசங்கியது. அவர்கள் தம் குளிரைப் போக்குவதற்காகப் பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பேற்றி, அதில் கைகளுக்குச் சூடேற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டனர். எனினும் அவர்களது பற்கள் நடுங்கின.

**அஃறிணைகளின் துயரம்**

- விலங்குகள் குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன.
- குரங்குகள் குளிரால் நடுங்கின.
- மரங்களில் தங்கியிருந்த பறவைகள், குளிர் தாங்க இயலாமல் நிலத்தில் விழுந்தன.
- பாலுண்ண ஓடிவந்த கன்றுகளைப் பசுக்கள் தவிர்த்தன.

இவ்வாறு, அந்தக் குளிர்காலத்து நள்ளிரவு 'மலையையே குளிரச் செய்வது போன்று இருந்தது' என்று நக்கீரர் பாடியிருக்கிறார்.

2. **பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.**

கம்பராமாயணத்தில், பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களிடத்துக் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழியாகக் காண்போம்.

**குகன் - உடன்பிறப்பு (வேடன்)**

வேட்டுவர் குலத் தலைவன் குகன். அவன் பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்டவன். இராமன் கங்கையைக் கடக்க அவன் உதவுகிறான். ராமனுக்கு, உடனிருந்து 'பணிவிடை செய்ய வேண்டும்' என்றும் அவன் விரும்புகிறான். ஒரு நாட்டின் இளவரசனான ராமன், குகனைச் சாதாரண வேடனாகக் கருதவில்லை; "அன்பு உள, இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்" என்று சொல்லி, உடன் பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான்.

**சடாயு - தந்தை (பறவை)**

இராவணன் சீதையைச் சிறைபிடித்தபோது, கழுகு வேந்தன் சடாயு தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான்; இராமனிடம் நடந்ததைக் கூறுகிறான்; பின் இறந்துவிடுகிறான். தன் தந்தையின் நண்பனான சடாயுவை, ராமன் தன் தந்தையாகவே பார்த்தான். எனவே, மகன் நிலையில் இருந்து சடாயுவுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

**சவரி - தாய் (எளிய முதியவள்)**

இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும் கொண்டவள் சவரி. சீதையைத் தேடி வரும் இராமனைச் சுக்ரீவனுடன் நட்பு கொள்ளுமாறு செய்தவள் இவள். இராமன் சவரியைச் சந்தித்தபோது இனிமையாகப் பேசினான்; "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?" என்று சவரியிடம் தாய் மீது காட்டும் அன்பைப் பொழிகிறான்.

**சுக்ரீவன் - நண்பன் (வானரம்)**

சீதையைத் தேடி வரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். இராமன், சுக்ரீவனை நண்பனாக ஏற்றுக் கொள்கிறான். இராமனும் சுக்ரீவனும் 'அம்மாவாசை காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும் சூரியனையும் ஒத்திருந்தனர்' என்கிறார் கம்பர்.

**வீடணன் - உடன்பிறப்பு (எதிரியின் தம்பி)**

சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என வீடணன், இராவணனிடம் கூறுகிறான். வீடணன் கூற்றை இராவணன் ஏற்காததால், இலங்கையை விட்டு அவன் வெளியேறுகிறான். பின்னர், இராமன் இருக்குமிடம் அடைந்து அடைக்கலம் வேண்டுகிறான். இராமன், "அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்" என்று சொல்லி அவனையும் உடன் பிறப்பாக ஏற்றுக்கொள்கிறான்.

இவ்வாறு, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் உயர்ந்த பண்பு கொண்டவனாக இராமனைக் கம்பர் படைத்திருக்கிறார்.

3. **செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறைவாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.**

வள்ளுவர் இயற்றிய திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. 1330 குறள் வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் மனித குலத்திற்குத் தேவையான பல்வேறு அறநெறிகளை எடுத்துக் கூறுகிறது. 'வாயுறை வாழ்த்து' என்று போற்றப்படும் திருக்குறளில், 'செய்ந்நன்றி அறிதல்' பற்றி கூறப்பட்டுள்ள கருத்துகளைக் காண்போம்.

செய்ந்நன்றி அறிதல் - பிறர் செய்த உதவியின் நன்மையை அறிதல்

**உதவியின் பெருமை**

- செய்யாமல் செய்த உதவி, விண்ணையும் மண்ணையும்விட உயர்ந்தது.
- உரிய காலத்தில் செய்த உதவி, இந்த உலகத்தைவிடப் பெரியது.
- பயன் எதிர்பாராமல் செய்த உதவி, கடலைவிடப் பெரியது.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது."

**உதவியின் சிறப்பு**

ஒருவர் தினையளவு உதவியைச் செய்திருந்தாலும், அதன் பயனை அறிந்தவர் பனையளவாக மதித்துப் போற்றுவர்.

**மறப்பதும் மறக்கக்கூடாததும்**

பிறர் செய்த தீமையை உடனே மறந்துவிட வேண்டும்; நன்மையை ஒருபோதும் மறக்கக் கூடாது. ஏனெனில், எந்த அறத்தை அழித்தவருக்கும் அப்பாவத்திலிருந்து மீண்டுவர வழியுண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்கு அப்பாவத்திலிருந்து மீள வழியே இல்லை.

"நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று."

இவ்வாறு, 'செய்ந்நன்றி அறிதலே அறம்' எனத் திருக்குறள் கூறுகிறது.

4. **சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.**

மனிதனை அழிப்பதில் அணு ஆற்றலை விட அதிக ஆற்றல் கொண்டது சினம். இத்தகைய கொடிய சினத்தைக் காத்து வாழ்வை மேம்படுத்தும் வழிகளை வள்ளுவம் கூறுகிறது.

**சினத்தைக் காக்க**

ஒருவர் தன்னைக் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். அதிலும், தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் சினம் கொள்ளாமல் இருப்பதே நல்லது.

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்."

**சினத்தால் வரும் கேடு**

சினத்தால் தீமையான விளைவுகளே ஏற்படும். சினம், ஒருவருடைய முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்லும். சினம், தன்னைக் கொண்டவரை அழிப்பதோடு அவருக்குத் துணையானவரையும் சேர்த்து அழித்துவிடும்.

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்."

இவ்வாறு, நமக்கும் நம்மைச் சார்ந்தவருக்கும் அழிவைத்தரும் சினத்தைக் காப்பதே, 'வாழ்வை மேம்படுத்துவதற்கான வழி' என்று வள்ளுவர் கூறுகிறார்.

5. **கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.**

கவிதை எழுதும் முறை பற்றி, ஒரு கவிதையே எழுதியிருக்கிறார் சுரதா. அக்கவிதையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை இங்கு காண்போம்.

**வேறுபாடுகளைத் தெரிந்துகொள்**

விண்வெளி வேறு, விண்வெளியில் இயங்கும் வெண்ணிலவும் சூரியனும் மேகங்களும் வேறு வேறு. மண் என்பது வேறு, அதனோடு கலந்து இருக்கும் மணல் என்பது வேறு. பனித்துளியும் மழையும் வெவ்வேறானவை. புகழ் வேறு, செல்வாக்கு வேறு. உலகைக் காண உதவும் வேறு, உள்ளத்தின் இருளை நீக்கும் அறிவுக்கண் வேறு. இந்த வேறுபாடுகளை எல்லாம் கவிதை எழுதுபவர் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

**வசனம் வேறு, கவிதை வேறு**

சொற்களைச் சேர்த்து எழுதும்போது எதுகை, மோனை, அடியளவு போன்றவற்றைப் பார்க்காமல் எழுதும் வடிவம் வசனம். யாப்பிலக்கணக் கோட்பாடுகளுக்குள் வந்து அடங்குமாறு சொற்களைச் சேர்ப்பது கவிதை.

**கவிதை உறுப்புகளைத் தெரிந்துகொள்**

எழுத்துகள் சேர்ந்து அசையாகும். அசைகள் சேர்ந்து சீராகும். சீர்களின் இடைவெளியில் தளைகள் அமையும். தளைகள் இணைந்து அடிகள் அமையும். அடிகள் தொடர்ந்தால் தொடைகள் வரும். தொடைகள் செழித்தால் நல்ல பாக்கள் அமையும்.

**வெண்பா எனினும் விளங்கும்படி எழுது**

தளைகள் தட்டாமல் பாடல் இயற்றவேண்டும். வெள்ளைப் பாட்டு என்றழைக்கப்படும் வெண்பாவின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்பவற்றுள் ஒன்று கொண்டு அமைய வேண்டும். அவ்வாறு கவிதை படைப்போர், பிறருக்கு எளிதில் புரியும் வண்ணம் கவிதை எழுத வேண்டும்.

**கற்ற பிறகு கவிதை எழுது**

நம் முன்னோர்கள் போல் நாம் கற்றால், நம் உள்ளத்தில் அறம், பொருள் என்னும் உயர் கொள்கைகள் தோன்றும். எனவே, கவிதை எழுத முயல்வோர் நம் முன்னோர் போல் கற்று, கவிதை எழுதத் தொடங்க வேண்டும்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.**

வள்ளுவர் இயற்றிய திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. 1330 குறள் வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் மனித குலத்திற்குத் தேவையான பல்வேறு அறநெறிகளை எடுத்துக் கூறுகிறது. 'வாயுறை வாழ்த்து' என்று போற்றப்படும் திருக்குறளில், 'அறிவுடைமை' பற்றி கூறப்பட்டுள்ள கருத்தைக் காண்போம்.

**நல்வழிப் படுத்தும்**

மனத்தை அது போகிற போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.

**மெய்ப்பொருள் காணும்**

எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

**உலகத்தோடு உறையும்**

உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, அந்த நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

**துன்பம் நீக்கும்**

பின்பு வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமை கொண்ட அறிவுடையோருக்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

**பாதுகாப்பு அரண்**

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றியும், பகைகொண்டு அழிக்கமுடியாத பாதுகாப்பு அரணும் அதுவே.

அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

எனவே, அறிவுடைமை மனித வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும்.

7. **திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.**

வள்ளுவர் இயற்றிய திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. 1330 குறள் வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் மனித குலத்திற்குத் தேவையான பல்வேறு அறநெறிகளை எடுத்துக் கூறுகிறது. 'வாயுறை வாழ்த்து' என்று போற்றப்படும் திருக்குறளில் அமைந்துள்ள வாழ்வியல் கருத்துகளைக் காண்போம்.

**மெய்ப்பொருள் காண்க**

எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும், அப்பொருளின் மெய்ப்பொருளைக் காணவேண்டும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

**வருமுன் காத்திடு**

பின்பு வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

**உருவம் கண்டு இகழாதே**

ஒருவரின் உருவத்தைக் கண்டு இகழக்கூடாது.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

**பக்குவமாக நடந்துகொள்**

அரசரைச் சார்ந்து இருப்பவர் பட்டும் படாமல் தொட்டும் தொடாமல் பக்குவமாக நடந்துகொள்ள வேண்டும்.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

**கள் உண்ணாதே**

உறங்கியவர் இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் நஞ்சுண்பவரே.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



எனவே, கள் உண்ணக்கூடாது.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

**சூதாடாதே**

சூதாடும் இடத்தில் ஒருவருடைய காலம் கழியுமானால், அது அவருடைய பரம்பரைச் செல்வத்தையும் இயல்பான நற்பண்பையும் கெடுக்கும். எனவே, சூதாடக்கூடாது.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

இவ்வாறு பல வாழ்வியல் கருத்துகளைக் கூறுவதால், திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் ஆகும்.

8. **எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.**

துன்பக் கேணியில் அகப்பட்ட எளிய மக்களின் வலிகளையும், அவர்களின் துயரம் மிகுந்த வாழ்வையும் நாட்டுப்புற இலக்கிய வடிவங்களான கும்மிப்பாடல்கள், கதைப்பாடல்கள் போன்றவற்றில் வெளிப்படுத்துகின்றனர்.

**தேயிலைத் தோட்டப் பாட்டு**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தினால், ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் கரும்புத் தோட்டத் தொழிலாளர்களாகவும் தேயிலைத் தோட்டக் கூலிகளாகவும் புலம்பெயர்ந்து பட்ட துன்பங்களைத் 'தேயிலைத் தோட்டப் பாட்டு' என்னும் கும்மிப்பாடல் விளக்குகிறது.

**நாயினும் கீழானோம்**

வணிகம் செய்ய வந்த வெள்ளையர்கள், இங்கே நடந்த கைத்தொழில்களையெல்லாம் நசுக்கி ஏழை எளிய மக்களை இழிவாய் நடத்தினர். நயமாய்ப் பேசி அவர்களை ஆலைக் கரும்பு போலக் கசக்கிப் பிழிந்தனர்.

**மண்ணுளிப் பாம்பு போல்**

கூலிக்கு வேலைசெய்த அந்த எளிய மக்களை ஏமாற்றி, பற்றுவரவுக் குறிப்பேட்டில் ஒன்றுக்குப் பத்தாகவும் நூற்றுக்கு ஆயிரமாகவும் கணக்கு எழுதினர். வரவேண்டிய பாக்கிக்காக அவர்களை இலங்கை, அந்தமான் போன்ற தீவுகளில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் சொற்ப கூலிக்குப் பணியமர்த்தினர். ஒவ்வொரு நாளும் அவர்கள் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் மண்ணுளிப் பாம்பு போல் துன்புற்றனர்.

**பொய்யுரைக்கு மயங்காதீர்**

இனிமேலும் இரக்கமில்லாத வெள்ளை அதிகாரிகளின் பொய்யான பேச்சைக் கேட்டு மயங்கி விடாதீர்கள். தேயிலைத் தோட்டத்திற்குச் சென்று இந்தியர் இவ்வாறு துன்பப் படுவதற்குக் காரணம் கல்வியறிவு இல்லாத குறைதான்.

**கல்வியைப் புகட்டுங்கள்**

எனவே, இதனைக் கண்ட பிறகாவது உங்கள் பிள்ளைகளுக்கு உயர்வைத் தரும் கல்வியைக் கொடுத்து, ஒற்றுமையோடு வாழ வழி செய்துகொள்ளுங்கள்.

இவ்வாறு, எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் முழுமையாய்ப் பிரதிபலிக்கின்றன.

2. **உரைநடை வினாக்கள்**

1. **'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' - என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**நான்** : ஐயா, வணக்கம்!

**பசுமை தாசனார்** : வணக்கம் தம்பி!

**நான்** : ஓர் ஐயம் ஐயா! 'நெகிழி' என்றால் என்ன?

**பசுமை தாசனார்** : 'பிளாஸ்டிக்' என்று சொல்கிறோமே! அதுதான் நெகிழி. 'பிளாஸ்டிகோஸ்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து 'பிளாஸ்டிக்' என்ற சொல் தோன்றியது. அழுத்தம் தந்தால் வளையாமலும் உடையாமலும் நெகிழ்ந்து கொடுப்பதால், இது 'நெகிழி' எனப்படுகிறது.

**நான்** : நெகிழியைப் பயன்படுத்தக் கூடாது என்கிறார்களே! ஏன் ஐயா?

**பசுமை தாசனார்** : ஆம், பயன்படுத்தக் கூடாது. ஏனென்றால், நெகிழியால் ஆன பொருட்களைப் பயன்படுத்திய பின் குப்பைத் தொட்டிகளில் வீசுகிறோம். அவை மக்குவதற்குப் பல ஆண்டுகள் ஆகும். நெகிழிப் பொருட்களை எரித்தாலும் டையாக்சின் வாயு வெளிப்படும். அதனால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளது.

**நான்** : சரி, ஐயா! நெகிழிப் பொருட்களை மறுசுழற்சி செய்யலாம் இல்லையா?



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**பசுமை தாசனார்** : மறுசுழற்சி செய்யலாம். அவ்வாறு செய்வதால் வெளியேறும் வாயுக்களால் நச்சுத்தன்மை எழும். அதனால், அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்குத் தோல்நோயும் புற்றுநோயும் உண்டாகும் தம்பி!

**நான்** : அது சரி ஐயா! நெகிழிப் பொருட்களைப் பல ஆண்டுகளாகப் பயன்படுத்திவிட்டுத் திடீரென்று 'பயன்படுத்தாதே' என்றால் முடியுமா?

**பசுமை தாசனார்** : நன்றாகக் கேட்டாய் தம்பி! மங்கலூரைச் சார்ந்த 'அஷ்வத் ஹெக்டே' என்பவர், சுற்றுச்சூழலுக்குக் கேடுதராத நெகிழி போன்றதொரு பொருளைக் கண்டுபிடித்துள்ளார். உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் இயற்கையான மாவுப்பொருள், தாவர எண்ணெயிலிருந்து கிடைக்கும் பொருள்கள், காய்கறிக் கழிவுகள் ஆகியவற்றிலிருந்து 'என்விகிரீன் பை'களைக் கண்டறிந்துள்ளார். நெகிழிக்கு மாற்றாக, நாம் இவற்றைப் பயன்படுத்தத் தொடங்கலாம்.

**நான்** : சரி ஐயா! அழகாகச் சொன்னீர்கள். பள்ளி மாணவனாகிய நான், இந்தச் சமுதாயத்திற்கு எங்ஙனம் விழிப்புணர்வு ஏற்படுத்தலாம்?

**பசுமை தாசனார்** : அருமை! அருமை!
'நெகிழியைப் பயன்படுத்தாதே! அகழியில் வீழ்ந்துவிடாதே!'
'நெகிழியை எரிக்காதே! கேன்சரைக் கொணராதே!'
'நெகிழியின் வளர்ச்சி! உலகின் வீழ்ச்சி!'
என்னும் வாசகங்களை மக்களிடம் கொண்டு செல்லலாம்.

**நான்** : மிக்க நன்றி ஐயா! நாம் அனைவரும் இணைந்து 'நெகிழியைத் தவிர்ப்போம் நிலத்தை நிமிர்த்துவோம்'.

2. **குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே, மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.**

எந்த மனிதச் சமூகக் கட்டமைப்பிற்கும் குடும்பமே அடிப்படை அலகாகும். பல குடும்பங்கள் சேர்ந்ததே ஓர் ஊர் எனப்படும். ஊர்கள் பல இணைந்து அமைப்பில் விரிவடைந்து குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் எனப் பெயர் பெறுகின்றன.

**குடும்ப அமைப்பு**

குடும்பம் என்ற அடிப்படை அலகில் கட்டமைக்கப்படுவதே சமூகம். குடும்பம் உருவாகத் 'திருமணம்' என்ற பந்தமே அடிப்படை. ஒரு குடும்பத்தில் தாய், தந்தை, குழந்தைகள் என்ற நிலை இருத்தல் வேண்டும். குடும்பத் தலைவனாகத் தந்தை செயல்படுவான். குடும்பப் பாரம்பரிய பிள்ளை வளர்ப்பு, தாயின் கடமை.

**சமூக வளர்ச்சி**

சமூகம் என்பது பல குடும்பங்கள் சேர்ந்து வாழ்வது. பலவித குழுக்கள் சமூகத்தில் இருக்கலாம். பழக்கவழக்கங்கள், மொழி, மதம் இவற்றாலும் பல குழுக்கள் அமையலாம். சமூகத் தலைவர்கள் தம் மக்களை ஒன்றிணைத்து வழிநடத்த வேண்டியவர்கள். மனிதனைச் சமூக வயப்படுவது குடும்பமே. குடும்பமே வாழிடம், ஊர், நகரம் என வளர்கின்றது.

**பல்வேறு பெயர்கள்**

குடும்பம் பல பரிணாம வடிவங்களில் வளர்ந்து வந்துள்ளது. அது தாய்வழிக் குடும்பம், தந்தைவழிக் குடும்பம், தனிக்குடும்பம், விரிந்த குடும்பம் எனப் பலவகைப் பெயர்களில் வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

**பரந்த அமைப்பு**

சமூகம், குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அதன் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாக இருக்கின்றது. தனிக்குடும்பம் விரிவு பெற்று கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் அவர்களது பெற்றோரும் சேர்ந்து வாழும் முறையும் காணமுடிகிறது.

இவ்வாறு, 'குடும்பம்' என்ற சிறிய அமைப்பிலிருந்து 'மனித சமூகம்' என்ற பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. தொன்மைமிக்க குடும்ப அமைப்புமுறையே தமிழ்ச் சமூகத்தின் பெருமிதமான அடையாளமாகும்.

3. **பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.**

கல்வியும் அதன் நோக்கமும் கற்பிக்கும் முறைகளும் காலந்தோறும் மாறிக்கொண்டே வருகின்றன. இக்கால அறிஞர்கள் பலர் அக்காலத்துத் திண்ணைப் பள்ளிக்கூட விளைச்சல்கள். எனவே, பண்டைக்கால கல்வி முறையில் ஆசிரியர், மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தெரிந்து கொள்வது நலம் பயக்கும்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**முறை வைப்பது**

தாய்தந்தையர் தம் குழந்தையின் ஐந்தாம் வயதில், கல்விப் பயிற்சிக்காக ஆசிரியர்களிடம் அடைக்கலமாக ஒப்படைப்பார்கள். ஏட்டின் மீது மஞ்சள் பூசி பூஜை செய்து பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். ஆசிரியர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுக்க, மாணவர்கள் அதனைப் பின்பற்றிச் சொல்வார்கள். இவ்வாறு ஆசிரியர் ஒன்றைச் சொல்ல, அதை மாணவர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்பது' என்று கூறுவர்.

**எழுத்துப் பயிற்சி**

பிள்ளைகள் முதன்முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். ஆசிரியர் முதலில் தரையில் எழுத, அதன்மேல் பிள்ளைகள் சொல்லிக்கொண்டே எழுதுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துகள் நன்றாக அமையும். இளம் பிள்ளைகளுக்கு ஆசிரியர் ஓலையை வாரி ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோர்த்துத் தருவார். மற்ற பிள்ளைகள் தாங்களே செய்து கொள்வார்கள். மாணவர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று, ஒவ்வொரு மாணவர்க்கும் தனித்தனியே ஏடுகளின் மேல் பகுதியில் ஆசிரியரே எழுதுவார்; அதைப்போல் மாணவர்களை எழுதிவரச் சொல்வார். இதற்குச் 'சட்டம்' என்று பெயர்.

**மனனப் பயிற்சி**

சிறுவர்கள் படிக்கும் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்றவை அகரவரிசையில் அமைந்தவை. அகரவரிசையில் படிப்பது நினைவாற்றலை வளர்ப்பதற்கே. இப்படியே அந்தாதி முறையைக் கொண்டும் எதுகை மோனைகளைக் கொண்டும் செய்யுள்களை மாணவர்கள் நினைவுபடுத்திக் கொள்வார்கள்.

**வாதம் புரிதல்**

கல்வியில் வாதம் செய்தல் அன்றைய பள்ளிக்கூடங்களில் இருந்துள்ளது. 'மிகச்சிறந்த நூல் பயிற்சி உடையவர் அரசவைகளில் வாதம் புரிந்து கல்வித் திறமையை நிலைநாட்டுவார்' என்று மதுரைக்காஞ்சி முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன. இந்த வாதம் புரியும் பழக்கம் பாடசாலைகளிலிருந்தே வளர்ச்சி பெற்று வந்தது எனலாம்.

**அன்பினால் அடக்குதல்**

முற்காலத்தில் கொடிய தண்டனைகள் இல்லை. ஆசிரியர்கள் மாணவர்களை அன்பினால் வழிப்படுத்தி வந்தார்கள். அவர்களிடத்தில் இருந்த மரியாதை மாணவர்களுக்குப் பயத்தை உண்டாக்கியது. மறந்தும் பிழை செய்யாத நிலையில் அன்றைய மாணவர்கள் இருந்தனர்.

எனவே, பண்டைக்கால கற்பித்தல் முறைகளைப் பழையன என்று புறந்தள்ளி விடாமல் தேவையானவற்றைத் தேர்ந்து பயன்படுத்தினால் இன்றைய கல்வியும் ஏற்றம் பெறும்.

4. **'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு' - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற நம் முன்னோர் வாக்கின்படி, ஒரு நகரமே கோவில்களால் நிறைந்து பெருமை பெற்றுள்ளது. அது, கோவில் கோபுரங்கள் நிறைந்த மதுரை மாநகரமே. மதுரை, தமிழ்நாட்டின் மிகப்பெரிய நகரங்களுள் ஒன்று. இந்நகரைப் பற்றி நானறிந்தற்றை இங்கு காண்போம்.

**கடம்பவனம் நகரானது**

மணவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சங்ககாலப் பாண்டிய மன்னன் குலசேகரன், கடம்பவனத்திலிருந்த ஒரு லிங்கத்தைச் சுற்றிக் கோவில் அமைத்தான். கடம்பவனக் காடுகளை அழித்து மதுரை நகரை உருவாக்கினான். இதனால், மதுரைக்குக் 'கடம்பவனம்' என்னும் பெயரும் உண்டு.

**மீனாட்சியம்மன் கோவில்**

மதுரை நகரின் நடுவில் மீனாட்சியம்மன் கோவில் அமைந்துள்ளது. கோவிலைச் சுற்றித் தாமரை வடிவில் நகரம் அமைந்துள்ளது. இக்கோவிலில் நடைபெறும் திருவிழாக்கள் பண்டைய மன்னர்களின் வரலாற்றை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன.

**சங்கம் வளர்த்த மதுரை**

முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமை மதுரை நகரையே சேரும். கி.மு. 1500 முதல் கி.பி. 250 வரை மூன்றாம் தமிழ்ச்சங்கம் நிலை பெற்றிருந்தது என்பதை இறையனார் அகப்பொருளுரை கூறுகிறது. இச்சங்கத்தில்தான் திருக்குறளும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அரங்கேறிப் பெருமையைப் பறைசாற்றின.

**சித்திரைத் திருவிழா**

மதுரையில் சித்திரைமாதத் திருவிழா 12 நாட்கள் நடைபெறும். விழா நிறைவான பதின்மூன்றாம் நாள் ஆற்றில் அழகர் இறங்கும் சிறப்பு நிகழ்வு பெருவிழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

**ஆயிரங்கால் மண்டபம்**

மதுரையின் மற்றொரு சிறப்பம்சம் ஆயிரங்கால் மண்டபம். இது வீர வசந்தராயர் மண்டபத்துடன் இணைந்தபடி உள்ளது. மதுரையின் வரலாற்றில் கலைத்தன்மைக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டு இந்த ஆயிரங்கால் மண்டபம்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



'மணக்கும் மல்லிகைக்குப் பெயர்பெற்ற மதுரை' என்பதைவிட, 'தூங்காநகரம்' என்னும் பெருமையைவிட, 'தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம்' என்னும் சிறப்பைவிட, 'பல்வேறு சமயங்களையும் ஒன்றாக வளர்த்து வேற்றுமையில் ஒற்றுமை காணும் மதுரை' என்னும் பெருமை மதுரைக்கு மணிமகுடம் ஆகும்.

5. **திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? - உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.**

கதை எழுதி, திரைக்கதை எழுதி, வசனம் எழுதி, இயக்கி, ஒளிப்பதிவு செய்து, இசை சேர்த்து பெரும் முதலீட்டில் உருவாகும் திட்டமிடப்பட்ட கூட்டு முயற்சியே திரைப்படம். இத்திரைப்படத் துறை, ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? என்று ஆராய்வோம்.

**ஆரம்ப காலம்**

ஆரம்பநிலையில் எடுக்கப்பட்ட திரைப்படங்கள் பொழுதுபோக்குத் தன்மையின் அடிப்படையில் புராணங்களையும் வரலாறுகளையும் கலைவடிவத்தில் தந்தன. திருவிளையாடல், வீரபாண்டிய கட்டபொம்மன், அரிச்சந்திரன், சத்திரபதி சிவாஜி போன்ற திரைப்படங்கள் இத்தகைய தன்மைகள் அமைந்து கலைகளின் சங்கமமாயின. ஆடல், பாடல், பின்னணியில் பிரமிப்பு என அத்திரைப்படங்கள் வெளிவந்தன.

**அரசியல் ஆதிக்கம்**

பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர்., கலைஞர் மு. கருணாநிதி ஆகியோரது காலகட்டங்களில், திரைப்படங்களில் அரசியலின் தாக்கம் அதிகரித்தது. திரைப்படத்துறையில் இருந்த பலர், திரைப்படத்தைத் தம் அரசியலுக்காகப் பயன்படுத்தத் தொடங்கினர். அதில் வெற்றியும் கண்டனர். அன்றைய திரைப்படங்களின் அனைத்து அங்கங்களையும் அரசியலே தீர்மானித்தது.

**நட்சத்திரத் தாக்கம்**

இன்றைய காலகட்டத்தில் திரைப்படத்துறையில் நட்சத்திரங்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. கதைக்காக நாயகன் என்ற நிலைமாறி, நாயகனுக்காகக் கதை எழுதப்படும் அவலநிலை அரங்கேறி வருகிறது. கதையை நம்பி இருந்த திரைப்படத்துறை, தற்காலத்தில் நட்சத்திரங்களை நம்பி இருக்கிறது. பெருந்திரளான ரசிகர்களைக் கொண்ட ரஜினி, கமல், அஜித், விஜய் போன்ற நடிகர்களின் தாக்கம் திரைப்படத்துறையில் பிரதிபலிக்கிறது.

**திரைப்படத் தொழில்**

மக்களை மகிழ்விப்பதோடு கலைகளை வளர்க்க வேண்டிய திரைப்படத்துறை, தற்போது அதிக வருமானத்தை ஈட்டித்தரும் தொழில் துறையாக மாறிவிட்டது. பெரும் பணம் படைத்தவர்கள் தம் பணத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகத் திரைப்படத் துறையில் முதலீடு செய்கின்றனர். மக்கள் சந்தையில் வரவேற்பு மிக்க நடிகர், இயக்குனர், இசையமைப்பாளர், ஒளிப்பதிவாளர் முதலானோருக்குக் கோடிகளில் ஊதியம் கொடுக்கின்றனர். அதனால், இன்றைய திரைப்படத்துறை வருமானம் ஈட்டித்தரும் ஒரு தொழில்துறையாகவே மாறிவிட்டது.

திரைப்படம், திரைப்படப்பாடல் சார்ந்த ஆய்வேடுகள், ஆய்வுரைகள் யாவும் திரைப்படத்துறையை இன்னும் கலையாகவே நோக்குகின்றன. ஆனால், தொழில்சார்ந்த முதலாளிகளின் ஆதிக்கம் இன்று மேலோங்கி இருப்பதால், திரைப்படத்துறை என்பது ஆயிரம்பேரைக் காப்பாற்றும் தொழிலாகவே இருக்கிறது.

6. **நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

இறையன்பு இந்திய ஆட்சிப்பணி அலுவலராகப் பணியாற்றி வருகின்றார். சிறுகதை, புதினம், தன்முன்னேற்ற நூல், நம்பிக்கை நூல் என இவர் படைப்புக்களம் விரிந்த பரப்புடையது. இவர், நிருவாக மேலாண்மை குறித்து இலக்கியத்தில் மேலாண்மை பாடப்பகுதியில் கூறியவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

**நிபுணத்துவம் பெறுதல் சாத்தியமில்லை**

உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை. ஆனால், யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அழைத்து அருகில் வைத்துக் கொண்டால் போதும். தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவு.

**நாலடியார் பாடல்**

"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர் - தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு"

என்ற நாலடியார் பாடலும் அதையே கூறுகிறது.

**வரவும் செலவும்**

நிருவாகத்தில், வரவே செலவைத் தீர்மானிக்கவேண்டும். வரவைத் தாண்டி நிறைய செலவு செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஷேக்ஸ்பியர் நாடகம்**

டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான். அவன் வரவு குறைந்தாலும் செலவு நீடித்தது. அவனது உதவியாளர் நிதி நிலைமையைப் பற்றி பேச வருகிறபோதெல்லாம் கேட்க மறுத்தான். ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரிக்கிறார்கள். ஆனால், அப்போதும் அவன் வருந்தவில்லை. தான் அளித்த விருந்தை உண்டவர்கள் உதவுவார்கள் என்று பொய்க்கணக்குப் போடுகிறான். அவனுடைய சேவகர்கள் நான்கு திசைகளுக்கும் சென்று வெறும் கையோடும் வெளிறிய முகத்துடனும் திரும்புகிறார்கள். அவன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான். 'டைமன்' பற்றிய ஷேக்ஸ்பியரின் நாடகம் நிதி மேலாண்மை பற்றிய மிகச் சிறந்த வாழ்வியல் விளக்கம்.

**நல்வழி பாடல்**

நல்வழியில் ஔவையார்,

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

என்று நிதியைக் கண்டபடி கையாள்பவர்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

இவ்வாறு, இலக்கியங்கள் அனைத்திலும் மேலாண்மை கருத்துகள் பரவிக் கிடப்பதை இறையன்பு அள்ளிக் கோர்த்து, தன் அனுபவத்தையும் மேலாண்மை மாலையாக்கித் தந்துள்ளார்.

## 3. துணைப் பாட வினாக்கள்

### 1. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

விடுதலைப் போராட்ட வீரரான பரலி. சு. நெல்லையப்பருக்குப் பாரதியார் எழுதிய கடிதத்தின் வாயிலாக, நான் அறிந்துகொண்ட மொழிப்பற்றையும் சமூகப்பற்றையும் இங்குக் காண்போம்.

**மொழிப்பற்று**

'பல மொழிகளைக் கற்க வேண்டும்; அதன்மூலம் தமிழ் மொழியை வளர்க்க வேண்டும்' என்பது பாரதியின் கொள்கை. பாரதி தம் கடிதத்தில்,

"உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு பாஷைகள் தெரிந்திருந்து, அந்த பாஷை பத்திரிக்கைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத் தெரிந்துகொள்ள முடியுமானால் தமிழ்நாட்டிற்கு எத்தனை நன்மையுண்டாகும்!

தமிழ்! தமிழ்! தமிழ்! என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க!

ஆனால் புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் தமிழில் ஏறிக்கொண்டே போகவேண்டும்" என்று கூறுகிறார். இதன்மூலம், பல மொழிகளைக் கற்றுத் தமிழ் மொழியைச் செழிக்கச் செய்ய வேண்டுமென்கிற மொழிப்பற்று வெளிப்படுகிறது.

**சமூகப் பற்று**

பாரதி, தமிழ் நாட்டின் மீதும் தமிழ் மக்கள் மீதும் மிகுந்த பற்று கொண்டவராக விளங்கினார். அவர் எழுதிய கடிதத்தில்

"தம்பி! தமிழ்நாடு வாழ்க என்றெழுது.
தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது.
தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.
ஆணும் பெண்ணும் ஓர் உயிரின் இரண்டு தலைகள் என்றெழுது.
அவை ஒன்றில் ஒன்று தாழ்வில்லை என்றெழுது.
தொழில்கள், தொழில்கள் என்று கூவு.

வியாபாரம் வளர்க என்று முழங்கு!" என்று எழுதுகிறார். இதன்மூலம், ஆணும் பெண்ணும் சமமென வாழ்ந்து, நோய்கள் நீங்கி, தொழில்கள் பெருகி தமிழ்ச்சமூகம் வளர்ச்சி பெறவேண்டும் என்கிற சமூகப் பற்றை அவர் வெளிப்படுத்துகிறார்.

பரலி. சு. நெல்லையப்பருக்குப் பாரதியார் எழுதிய கடிதம் நம்மிடத்தில் மொழிப்பற்றையும் சமூகப் பற்றையும் வளர்க்கிறது என்றால் அது மிகையாகாது.

### 2. பொறுப்புணர்ச்சி இன்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

சமுதாயத்தில் இருக்கும் சிக்கல்களை யாவரும் பேசிக்கொண்டே இருக்க, அவற்றுக்கு எவ்வாறு தீர்வு காண்பதென்று 'முதல் கல்' கதையில் உத்தமசோழன் விடை கூறுகிறார். அக்கதையில், தன் பொறுப்புணர்வால் ஊரையே மாற்றிய மருதனின் பண்பு நலத்தைக் காண்போம்.

**வாடிய பயிர் கண்டு வாடினான்**

ஊரில் நான்கு நாள் பெய்த அடைமழையால், வயல்களில் நடப்பட்டிருந்த இளம்பயிர்கள் நீரில் மூழ்கிக் கிடந்தன. நீரில் மூழ்கி வாடிய பயிரைக் கண்டு மருதன் வருத்தமுற்றான். அவன், நீரை



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

அகற்றுவதற்கான வழியைத் தேடினான். ஊரில் மூன்று மைல் நீள வடிகால் வாய்க்காலில் காட்டாமணக்குச் செடிகள் மண்டிக் கிடந்ததால் வயல் நீர் வெளியேற முடியவில்லை என்பதை அறிந்தான்.

**ஊராரை அழைத்தான்**

காட்டாமணக்குச் செடிகளை அகற்றுவதற்காக, மருதன் ஊரில் நன்றாக உழைக்கின்ற மக்களை அழைக்கிறான். முதலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மாரிமுத்துவை அழைக்கிறான்; இரண்டாவதாக ஏராளமான நிலங்களை விவசாயம் செய்யும் கிழவன் காளியப்பனை அழைக்கிறான்; மூன்றாவதாக மன்றம், அது, இது என்று என்னென்னவோ செய்து கொண்டிருக்கும் பிரேம்குமாரை அழைக்கிறான்; ஒருவரும் வராத நிலையில் இறுதியாகத் தன் மனைவி அல்லியை அழைக்கிறான். ஊருக்கான பொதுப் பணியை ஊரார் அனைவரும் இணைந்து செய்ய வேண்டும் என்று மருதன் விரும்பினான்.

**ஆணாதிக்கம் கொள்ளாமை**

காட்டாமணக்குச் செடிகளை அகற்ற மருதன் தன் மனைவியை அழைக்கிறான். அதற்கு அவள், "ஏன் மாமா... தெரியாமத்தான் கேக்குறேன்.... நீ நட்டு போட்டிருக்கிற எந்த நிலம் பாழாப் போயிடப் போவுது......? எந்த நிலம் எப்படிப் போனா உனக்கென்ன? நமக்குன்னு சொந்தம் கொண்டாட இருக்கிறது நம்ம கையும் காலும்தான். இந்த ஊர் இல்லன்னா இன்னொரு ஊரு..... வேலையப் பாப்பியா....? என்ற ஆவேசமாய்க் கொட்டி முழங்கிவிட்டு உள்ளே போனாள். தன் மனைவி என்றாலும் மருதன் அவளைக் கட்டாயப்படுத்தவில்லை. தன்னந்தனியாகக் காட்டாமணக்குச் செடிகளை அகற்றச் செல்கிறான்.

**தன்னலம் பாராமை**

ஊரிலிருக்கும் அறுபது வேலி நிலத்தில், மருதனுக்கு ஒரு சர்க்கரைக்குழி நிலம்கூட இல்லை. சிறிய நிலம்கூட இல்லாத மருதன், அறுபது வேலி நிலத்தில் மூழ்கிய பயிர்களைக் காக்க முயற்சி செய்கிறான். யாரும் வராத நிலையில், இடுப்பளவு தண்ணீரில் இறங்கி தன்னந்தனியே நின்றபடி காட்டாமணக்குச் செடிகளைச் சரக் சரக்கென்று அறுத்தெறிந்தான்.

**ஊரையே வரவைத்தான்**

கணவன் தனியாகக் கஷ்டப்படுவதைக் கண்டு பொறுக்கமுடியாமல், அல்லியும் புடவையை வரிந்து கட்டிக்கொண்டு வாய்க்காலில் இறங்கினாள். அவர்களைப் பார்த்து வலை போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்த மாரிமுத்துவும் வந்து சேர்ந்தான். அவ்வழியாக ஊருக்குப் போய்க் கொண்டிருந்த கிழவர் காளியப்பன் எதேச்சையாக வாய்க்காலைப் பார்த்தார். மருதன்...., அல்லி...., மாரி..... மூவரும் மும்முரமாய் செடிகளை அகற்றுவதைப் பார்த்து, வண்டியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு அவரும் வந்து சேர்ந்தார். வண்டிக்காரன் ஊரில் போய் சொல்ல ஊரே வாய்க்காலுக்கு வந்து சேர்ந்தது.

இவ்வாறு பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரை, மருதன் தன் பொறுப்புணர்வால் மாற்றி விட்டான்.

3. '**உரிமைத் தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்......- கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.**

**சகோதரர்கள் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்......**

எளிதா முடியும்னு நினைச்சா இப்படி ஆயிடுச்சேன்னு முத்தையன் வெள்ளைச்சாமி வீட்டில் உட்கார்ந்திருந்தான். "மூக்கம்மா நகைய அடமானம் வச்சி, கையில 200 இருக்கு. மேலூரு போயி, பங்காரு சாமிகிட்ட நம்பிக்கை பத்திரத்த வாங்கிட்டு வந்துடறேன். நீ கவலைப்படாத!" என்று முத்தையன் சொன்னான்.

சுவரில் எறிந்த பந்தாக, "எனக்கு ஒன்னும் நீ உதவ வேணாம். நீ எனக்கு அண்ணனே இல்லேங்குறேன். உனக்கு மானமில்லே.... உறுத்தியதால உதவ வந்துட்டீரோ....?" என்று சொல்லித் துண்டை உதறி விட்டு வீட்டை விட்டுக் கிளம்பினான் வெள்ளைச்சாமி.

"எங்க வாழ்க்கைய நாங்க பார்த்துக்கிறோம். அடுத்தவக மூக்க நுழைக்க வேணாம்"

"அடுத்தவகளா......! என்ன......., வாய் நீளுது?"

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. சின்னவளைப் பற்றி முத்தையனுக்கு நன்கு தெரிந்ததால், சாக்கடையில் கல் எறிய வேண்டாம் என விருட்டென்று தன் வீட்டிற்கு வந்து விட்டான்.

"வெள்ள வீட்டுக்குப் போனீகளே! என்னாச்சு?" மூக்கம்மா பணிவாகக் கேட்டாள்.

"மண்ணாப் போச்சு. அவங்க வாழ்க்கைய அவுக பாத்துப்பாகலாம். அடுத்தவக உள்ளே வரவேண்டாம்னு சொல்லிட்டாக. நம்ம பொழப்ப நம்ம பாப்போம். மனசுல இரக்கப்பட்டா கஷ்டம்தான் வருது. இனி, அவன் எப்படிப் போனா நமக்கென்ன?" என்றான் முத்தையன்.

"உங்கள பாத்தா அடுத்தவுகனு சொன்னாக...!?" கண்ணீரோடு கேட்டாள் மூக்கம்மா.

"வெந்த புண்ணுல வேலப் பாச்சாத...!" என்று சொல்லி விட்டு முத்தையன் கடைத்தெருவுக்குப் புறப்பட்டான்.

வெள்ளைச்சாமி, மாரிமுத்து வீட்டில் கடன் கேட்டு நின்றான்.

"இருநூறு கடன், அத அடைக்கணும். அப்பறம்..... விதைப்புக்குக் கொஞ்சம் ரூவா தேவப்படுது....." என்று இழுத்தான் வெள்ளைச்சாமி.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



"கத சொல்லாத! எம்புட்டு வேணும்? கணக்கப்புள்ள, ஒரு ஆயிரம் குடுத்துட்டு வெள்ளைச்சாமிக் கிட்ட பத்திரத்துல கையெழுத்து வாங்கி வச்சிக்குங்க!" என்றார் மாரிமுத்து.

வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு, ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொண்டான் வெள்ளைச்சாமி. புதிய பணம் குறுகுறுத்தது. புது சேலை, வேட்டி, சட்டை, பிள்ளைகளுக்கு மாடர்ன் டிரஸ் என வெள்ளைச்சாமி குடும்பம் பளபளத்தது. முத்தையன் பார்க்கும்படியாக எல்லோரும் புத்தாடையோடு சிரித்துப் பேசி, 'நாங்க நல்லாதான் இருக்கிறோம்' என்று காட்டிக் கொண்டார்கள். வருடங்கள் சில உருண்டன.

வயல்காட்டில் வேலை செய்து கொண்டிருந்த முத்தையன் பதறியடித்து வீட்டுக்கு வந்து, "மூக்கம்மா! மூக்கம்மா! வெள்ளச்சாமி நிலத்துல லாரிகளா வந்து மண்ணுங்கல்லும் கொட்டிட்டு போகுதே...! இவன் எங்கே?" என்று கேட்டான்.

"அவுக ரெண்டுபேரும் எங்க போனாங்கன்னே தெரியல" என்று அவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே மாரிமுத்து அடியாட்களோடு வெள்ளைச்சாமியும் வந்து இறங்கினான்.

"இந்தப் பாரு முத்தையா! நீயும் கேள்விப்பட்டிருப்ப...! நம்ம ஊரு அந்தோணி வந்து ஏதோ வெள்ளக்காரன் கம்பெனி கட்ட இடம் கேக்குறாங்க, நிறைய தருவாங்களாம் அப்படின்னான். நூறு வருஷத்துக்கு வட்டி தொழில் செஞ்சாலும் கிடைக்காத தொகையா, அது இருந்துச்சு. உன் தம்பி, மத்தவங்க எல்லாம் என்கிட்ட வாங்கின கடனுக்கு நிலத்த விட்டுட்டாங்க. நானும் கம்பெனி காரனுக்குக் கெரையம் பண்ணிக் கொடுத்துட்டேன். உன் நிலம் மட்டும்தான் பாக்கி. சுத்தி கம்பெனி வந்துருச்சுன்னா, நீ எங்கிருந்து விவசாயம் பண்ணுவ...? அதனால.... உன் நிலத்தையும் எழுதிக் கொடுத்துட்டு நகரத்தில போய் பொழச்சிக்க!" என்றான் மாரிமுத்து.

முத்தையனுக்கு, வாயும் கையும் கட்டிப் போட்டதுபோல ஆச்சு. தம்பி மேல கோபம் கோபமாக வந்தது. எத்தனை தம்பிகள் மேல் கோபப்படுவது...? முத்தையனும் "சரி...!" என்று தலையாட்டினான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு, முத்தையன் குடும்பம் ஊரைக் காலி செய்துவிட்டுப் பேருந்திற்காகக் காத்திருந்தது. திருப்பூர் பஸ் வந்ததும் முத்தையன் குடும்பம் ஏறிவிட்டது. பஸ் கிளம்பியது.... அதில் ஏறத் தயாரான வெள்ளைச்சாமியை அவன் மனைவி தடுத்தாள்.

"ஏண்டி...! பஸ் காலியாத்தான இருக்கு. ஏன் கையப் பிடிச்சி இழுத்த...?" என்றான் வெள்ளைச்சாமி.

"அவுக போற பஸ்ல நாம போகவேணாம்...!" என்ற கசப்பான வார்த்தைகளை, ஊர் காற்று முத்தையன் காதோரம் வீசிச் சென்றது.

4. **'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?**

உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு இந்தியா. இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலம் தமிழ்நாடு. இந்தியாவில் ஏற்படும் மொத்த சாலை விபத்துகளில் 15 விழுக்காடு விபத்துகள் தமிழ்நாட்டில் நடப்பதென்பது வேதனைக்குரியது. எனவே, சாலைவிபத்தில்லாத் தமிழ்நாட்டை நாம் உருவாக்க வேண்டும்.

**சாலை விபத்திற்கான காரணங்கள்**

தமிழ்நாட்டில் நடைபெறும் மொத்த விபத்துகளில் 35 விழுக்காடு, இருசக்கர ஊர்திகளால் ஏற்படுபவை. இருசக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணியாமல் செல்வது, இரண்டு பேருக்கும் மேற்பட்டோர் பயணிப்பது, கைபேசியில் பேசிக்கொண்டே செல்வது, சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்குவது, போட்டி - பந்தயம் எனச்சொல்லிப் பொதுவழியில் உச்ச வேகத்தில் ஓட்டுவது, காதணி கேட்பிகள் பொருத்திக்கொண்டு ஊர்திகளை ஓட்டுவது, மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது, அவசரம் என்கிற பெயரில் வேகமாக ஊர்தியை இயக்குவது, சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வு இல்லாமை போன்றவையே பெரும்பாலான விபத்துகளுக்குக் காரணமாகின்றன.

**பள்ளி மாணவர்கள்**

மாணவர்களில் சிலர் சாலைகளில் விளையாடுவது, கவனிக்காமல் திடீரென்று சாலையைக் கடப்பது, சாலையின் நடுவே செல்வது, சாலையை அடைத்துக் கொண்டு குழுவாகச் செல்வது, வேகமாகச் செல்லும் வாகனத்தின் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு மிதி வண்டியில் செல்வது, ஓடும் பேருந்தில் ஏறுவது இறங்குவது, பேருந்தின் படிக்கட்டில் தொங்கிக் கொண்டு பயணம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால், தங்கள் உயிரையும் உடல் உறுப்புகளையும் இழக்க நேரிடுகிறது. இது அவர்களின் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பெரிய இழப்பு.

**சாலைக் குறியீடுகள்**

சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன. அவற்றை உத்தரவுக் குறியீடுகள், எச்சரிக்கைக் குறியீடுகள் தகவல் குறியீடுகள் என மூன்றாகப் பிரித்தறியலாம். அக்குறியீடுகள் பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும் ஏற்பட வேண்டும். மாணவர்களாகிய நீங்கள் சாலைப் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வைப் பெறுவதன் மூலம் எதிர்காலத்தில் சாலை விபத்துகளே இல்லாத தமிழகத்தை உருவாக்க முடியும்.

**சாலைப் பயனாளிகளுக்குச் சில ஆலோசனைகள்**

★ பாரிஸ் நகரத்தில் 1909 ஆம் ஆண்டு நடந்த முதல் 'பன்னாட்டு சாலை அமைப்பு' மாநாட்டில்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



சாலை பயணிகளுக்கான சில வரைமுறைகள் வகுக்கப்பட்டன.

★ சாலை பயணிகள் சாலையின் வகைகள், மைல்கற்களில் விபரங்கள் பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
★ போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும், போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்ப சாலையைப் பயன்படுத்த வேண்டும்.
★ நடைமேடை, நடைபாதையைப் பயன்படுத்துபவர்களையும் சாலையைக் கடப்பவர்களையும் அச்சுறுத்தக் கூடாது.
★ சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. தேவையான இடங்களில் சரியான சைகையைச் செய்ய வேண்டும்.
★ எதிரில் வரும், கடந்து செல்ல முற்படும் ஊர்திகளுக்கு வழிவிடவேண்டும். தேவையெனில், வேகம் குறைத்து இதர வாகனங்களுக்குப் பாதுகாப்புடன் வழிவிட வேண்டும்.
★ இதர சாலைப் பயனாளிகளையும் நண்பராக எண்ண வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் சாலை விதிகளை முறையாகப் பின்பற்றி பயணத்தை மேற்கொண்டால், "சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு" என்ற கூற்று விரைவில் நனவாகும்.

5. '**கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்துவருகின்றன' - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.**

முன்பெல்லாம், அதிகாலையில் விழிக்கும் கிராமம் அந்தி சாய்ந்ததும் உறங்கத் தொடங்கிவிடும். மண்சார்ந்த கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளில் கிராமமே தன் மனதைப் பறிகொடுக்கும். கிராமத்துக்காரர்கள், ஊரில் நிகழ்வதையும் சுற்றியுள்ள கிராமங்களின் தகவல்களையும் ஒன்றுவிடாமல் மனதில் வைத்திருப்பர். இவையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி(மறைந்து) வருகின்றன.

**வீழும் விவசாயம்**

அன்றைய கிராமங்களில், வேளாண்மைப் பணிக்காகப் பெரும்பான்மையான மக்கள் வயல்வெளிகளைத் தேடிச்செல்வர். ஆனால் இன்று, கிராமங்களிலிருந்து கூலி வேலைக்காகப் நகரங்களை நோக்கிச் செல்கின்றனர். செல்வத்தை அள்ளித்தந்த வேளாண்மை, இன்று கடன் சுமைகளைத் தாங்க முடியாத அளவுக்குத் தருவதால், விவசாயிகள் நகரங்களை நோக்கி புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**கரைந்துபோன கலைகள்**

கிராம மக்கள் முன்பெல்லாம் நாதஸ்வரக் கலைஞர்கள், ஒயிலாட்டக்காரர்கள், கரகாட்டக்காரர்கள், வில்லிசைக் கலைஞர்கள், பறையிசைக் கலைஞர்கள், பொம்மலாட்டக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள் என்று பல்வேறு கலைஞர்களுக்கும் வாய்ப்பளித்து அவர்கள் வாழ்வையும் வளப்படுத்தினர். நாகரிகம் என்னும் நஞ்சும் நகரப் பண்பாட்டுத் தாக்கமும் கிராமங்களில் இருந்த கலைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்துவிட்டன.

**உருமாறும் கிராமங்கள்**

'கிராமத்தின் பிள்ளைகளை நுனிநாக்கில் ஆங்கிலம் பேச வைத்து, உலகின் உச்சிக்குக் கொண்டு செல்வோம்' எனும் வாக்குறுதிகளை அள்ளி வீசும் குரல்களை நம்பிய கிராம மக்கள், மேல்தட்டு மக்களாய் மாறி வருகின்றனர். கிராமங்களில் காந்திநகர், பாரதிநகர், அன்புநகர், அம்பேத்கர்நகர் எனப் பல நகர்கள் முளைத்துவிட்டன. இவை, கிராமத்திற்கு நகர வடிவம் கொடுக்க தொடங்கிவிட்டன.

**உயிர்த்துடிப்பு**

கிராமங்கள், தங்கள் இயல்பிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டிருந்தாலும், ஏதோ ஒரு மூலையில் இன்னும் பறையிசையும் கரகாட்டமும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. தமிழக இளைஞர்கள் ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் மூலம் தங்கள் பண்பாட்டை இன்னும் உயிர்ப்புடன்தான் வைத்திருக்கின்றனர்.

கிராமங்கள், தங்கள் முகவரியைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகின்றன என்பது உண்மைதான். ஆனால், கிராமத்தின் முகவரி முற்றிலும் அழிந்துவிடப் போவதில்லை. ஆங்காங்கே, கிராமங்களின் முகவரி இன்னும் உயிர்ப்புடன்தான் இருந்து வருகிறது. அதை மீட்டெடுக்க வேண்டியது நம் அனைவரின் கடமை.

8. '**கோடைமழை' என்னும் கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.**

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பெண் படைப்பாளர் சாந்தாதத். அமுதசுரபியில் வெளியான இவரது 'கோடைமழை' என்னும் சிறுகதை 'இலக்கியச் சிந்தனை' அமைப்பின் சிறந்த சிறுகதைக்கான விருதைப் பெற்றது. அக்கதையில் வெளிப்படும் மனிதநேயப் பண்புகளை இக்கட்டுரையில் காண்போம்.

**மகனின் இழப்பு**

கைக் குழந்தையை விட்டுவிட்டு நான்கு நாள் காய்ச்சலில் கட்டியவள் கண்மூடியபின் வாழப்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

பிடிக்கவில்லை என்று ஆறுமுகத்தின் மகனும் விஷத்தை விழுங்கிப் போய்ச் சேர்ந்துவிட்டான். ஆனால், ஆறுமுகம் அப்படியில்லை. நாற்பது ஆண்டுகளுக்கு மேலாய் நிழலாய் இருந்த தன் மனைவி பூமியில் தன் கணக்கை முடித்துக் கொண்டபின், சிதையில் அவர் விழவில்லை; மகனுக்காக வாழ்ந்தார்; அதேபோல் இன்றும் பேரனுக்காக வாழ்கிறார்.

**தன் காலத்திற்குப் பிறகு**

மூன்று நாட்களாய்க் காய்ச்சல், சளி என்று சிரமப்பட்ட கைக்குழந்தையை மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்று, நீண்ட வரிசையில் காத்திருந்து, ஊசி போட்டு மருந்து எழுதி வாங்கி வந்தார் ஆறுமுகம். தள்ளாத வயதில் இருக்கும் தன் காலத்திற்குப் பிறகு குழந்தையின் நிலைமை என்னவாகும் என யோசித்த ஆறுமுகம், குழந்தையைத் தத்துக் கொடுக்க முடிவு செய்தார்.

**தாய்ப்பாசம் தேவை**

"அம்மா என்கிற பாசமே தெரியாமலிருக்க இது மட்டும் என்ன பாவம் செய்தது? பெண்ணோட பரிவும் பாசமும் ஒரு குழந்தைக்கு எவ்வளவு முக்கியம் என்று இப்பதான் நல்லாப் புரிஞ்சது. இதப் பிரிஞ்சு இருக்க முடியாது என்கிற என்னோட சுயநலத்துக்காக, இத அனாதையா விட்டுட்டுப் போறது எவ்வளவு பெரிய பாதகம்" என்று பாபுவிடம் மனம் திறந்தார் ஆறுமுகம்.

**தத்துக் கொடுத்தல்**

மறுநாள், பாபுவுடன் வந்த கணவனும் மனைவியும் முறைப்படி குழந்தையைத் தத்தெடுத்தனர். குழந்தையைப் பெற்றுக்கொண்ட கணவன் முகத்தில் ஏக்கம், தவிப்பு, எதிர்பார்ப்பு ஆகிய அத்தனையும் தெரிந்ததைப் பார்த்த ஆறுமுகம், விழிநீரைப் பிடிவாதமாய் வந்தவழி அனுப்பி வைத்தார்.

**தாத்தாவையும் தத்தெடுத்தல்**

குழந்தையைத் தத்தடுத்த கணவன் "ஐயா! ரொம்ப பெரிய மனசோட எங்க வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கொடுத்திருக்கீங்க. நீங்களும் எங்களோட வந்திடுங்கய்யா!" என்றான். குழந்தையைப் பிரிந்த அந்த முதியவர் அனாதையாக்கி விடக்கூடாது என்பதற்காக, குழந்தையோடு சேர்த்து அவரையும் தத்தெடுக்கும் மனிதநேயப் பண்பினை அவர் வெளிப்படுத்துகிறார்.

இதுபோன்ற சிந்தனையும் பெருந்தன்மையும் இருந்தால் ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்கள் ஆகியோரின் எண்ணிக்கை இச்சமூகத்தில் குறைந்துவிடும் என்பதை இக்கதை வெளிப்படுத்துகிறது.

## 4. மனப்பாடப்பகுதி

### 1. தண்டியலங்காரம்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

- **உரை மேற்கோள் பாடல்**

### 2. நெடுநல்வாடை

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க.

- **நக்கீரர்**

### 3. கம்பராமாயணம்

துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

- **கம்பர்**

### 4. கம்பராமாயணம்

குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு;பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல்அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

- **கம்பர்**

### 5. இதில் வெற்றி பெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

- **சுரதா**

### 6. புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

- **ஔவையார்**



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

### 7. தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியா திருக்கவேண்டும்.

- **இராமலிங்க அடிகள்**

### 8. சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடிநின்று இசைத்தது ஆமந்திரிகை

- **இளங்கோவடிகள்**

### 9. புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்;

- **பிசிராந்தையார்**

### 10. இரட்சணிய யாத்திரிகம்

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

### 11. சிறுபாணாற்றுப்படை

எழுசமங் கடந்த எழுஉறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்...

- **நத்தத்தனார்**

### 12. திருக்குறள்

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது.
2. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
   தெய்வத்துள் வைக்கப் படும்.
3. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
   வானகமும் ஆற்றல் அரிது.
4. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
   அன்றே மறப்பது நன்று.
5. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
   செய்ந்நன்றி கொன்ற மகற்கு.
6. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
   வேண்டும் பிறன்கைப் பொருள்.
7. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
   பிறத்தல் அதனான் வரும்.
8. தன்னைத்தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால்
   தன்னையே கொல்லும் சினம்.
9. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
   ஏமப் புணையைச் சுடும்.
10. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
    உண்மை அறிவே மிகும்.

### 13. திருக்குறள்

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
   உள்ளழிக்க லாகா அரண்.
2. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
   மெய்ப்பொருள் காண்பது அறிவு.
3. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
   அதிர வருவதோர் நோய்.
4. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
   அல்லல் படுப்பதூஉம் இல்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

6. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

7. உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

8. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

9. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

10. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

Padasalai.Net



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com